உ

பரமபதிதுணை.

பெரிய

விவேகசிந்தாமணி.

இஃது

மதுரைமேலமாசிவீதி

மு. திருமலைமுத்துப்பிள்ளை

அவர்களால்

சீர்திருத்தஞ்செய்து

இதன் விலை அணா 4.

மதுரை வடக்குமாசிவீதி

இ. ராம. குருசாமிக்கோனார்

அவர்களது

மதுரை

ஸ்ரீ ராமச்சந்திரவிலாச அச்சியந்திரசாலையிற்,

பதிப்பிக்கலாயிற்று.

1907.

உ

பரமபதிதுணை.

விவேகசிந்தாமணி.

கடவுள்வணக்கம்.

அல்லல்போம் வல்வினைபோ மன்னைவயிற் றிற்பிறந்த
தொல்லைபோம் போகாத் துயரம்போம்—நல்ல
குணமதிக மாமருணைக் கோபுரத்துண் மேவுங்
கணபதியைக் கைதொழுதக் கால்.

பெருங்கருணைக் கடறதும்பித் திருவுருவந் தரித்துப் பேசருமா சான்மறைந்த வாருயிரை யெடுத்தே, இரும்புகழ்சேர் விஞ்ஞான கலராதி மூவ ரெனத்தொகுத்துத் தனுவாதி யீந்துழும்மா யையினில், வருஞ்சகலர்க் கிருவினையொப் பாக்கிமல பாகம் வருவித்துத் திருவடிக்கீழ் வைப்பான்மன்றதனுள், அருங்கருணை யைந்தொழிற்கூத் தாடுமிறை யடிகளது கமலத் தொளிவளரக் கருதியிருத் திடுவாம்.

மழைச் சிறப்பு.

மழையின்றி மாநிலத்தார்க்கில்லை மழையும்
தவமிலா ரில்வழியில்லை தவமும்
அரசிலா ரில்வழி யில்லை யரசனும்
இல்வாழ்வா ரில்வழி யில்.

வேத மோதிய வேதியர்க் கோர்மழை
நீதி மன்னர் நெறியினுக் கோர்மழை
மாதர் கற்புடை மங்கையர்க் கோர்மழை
மாத மூன்று மழையெனப் பெய்யுமே.

மழை இன்மைக்குக் காரணம்.

அரிசி விற்றிடு மந்தணர்க் கோர்மழை
வரிசை தப்பிய மன்னருக் கோர்மழை
புருட னைக்கொன்ற பூவையர்க் கோர்மழை
வருட மூன்று மழையெனத் தூறுமே. ௩

உழவுச் சிறப்பு

அலகிலா மறைவிளங்கு மந்தணரா குதிவிளங்கும், பலகலை
யாந் தொகைவிளங்கும் பாவலர்தம் பாவிளங்கும், மலர்கு
லாந் திருவிளங்கு மழைவிளங்கு மனுவிளங்கும், உலகெலா
மொளிவிளங்கு முழவருழு முழவாலே. ௪

ஞானிகள் பெருமை.

எத்தொழிலைச் செய்தாலு மேதவத்தைப் பட்டாலும்
முத்தர் மனமிருக்கு மோனத்தே-வித்தகமாய்க்
காதிவிளை யாடியிரு கைவீசி வந்தாலும்
தாதிமன நீர்க்குடத்தே தான். ௫

சோரமனை யாட்டிமிகச் சோரபிரான் மேன்மனதாய்ச்
சேரத் தொழில்செய்யுந் திட்டம்போல்-பேர்பெரியர்
அத்தனடி மேன்மனத்தை யானுது வைத்துகந்தே
எத்தொழிலுஞ் செய்வ ரிசைந்து. ௬

அரியணையி லிருந்துலக வரசாக்ஷி புரிந்தாலு மங்கை யே
ற்றுத்,தெருவுதொறுந் திரிந்திரந்து தின்றாலு மிளம்பருவத்
தெரிவை மாரைப்,பிரியாம லிருந்தாலும் பிரிந்துதவம் புரிந்
தாலும் பேசிற் றெல்லாம்,விரிசீவ முத்தனுக்கிங் குடம்பா
டேயன்றியொன்றும் விரோத மின்றே, ௭

மண்போற் பொறுமை யுடையோரும் மதிபோற் சாந்த முடையோரும், புண்போ லுடலைப் புணர்ந்தோரும் புனல்போ லொழுக்கம் பூண்டோரும், கண்போ லிரக்க முடையோருங் கனல்போற் புசிக்குங் கதியோரும், விண்போ லறிவை யறிந்தோரும் பிறவா ரிந்த மேதினிக்கே. ௮

இந்திரியக் குஞ்சரத்தை ஞான விருங்கயிற்றாற்
சிந்தனைத்தூண் பூட்டித் திதிபெறவே-பந்திப்பார்
இம்மைப் பயனு மினிச்செல் கதிப்பயனுந்
தம்மைத் தலைப்படுத்து வார். ௯

அஞ்சக் கரமெனுங் கோடாலி கொண்டிந்த வைம்புலனும்
வஞ்சப் புலக்கட்டை வேரற வெட்டி வளங்கள்செய்து
விஞ்சத் திருத்திச் சதாசிவ மென்கின்ற வித்தை யிட்டுப்
புஞ்சைக் களைபறித் தேன்வளர்த் தேன்சிவ போகத்தையே.

பொன்போல விலங்குமனஞ் சஞ்சலத்தாற் குரங்காம் புத்திவிசா ரித்தறியும் பொலிவதனா லரவாந், தன்போல விலையெனலா லகங்கார மதமாந் தனைநிகராஞ் சித்தமொரு தன்மையினா னாயாம், மின்போலுஞ் சலனமன மசையாம லிறுத்தி விசாரிக்கும் புத்தியினை மெய்ப்பொருட்பால் விடுத்து, வன்போடு வருமகங்கா ரத்தினையுங் கடிந்தால் வைத்தவிடத் திருந்து சித்த மகத்துவமுந் தருமே. ௧௧

இல்லறம்.

பிரம சாரி வனத்துறைவோன் பேணுந் துறவி தென்புலத்தோர், குரவர் தேவர் விருந்தொக்கல் கோக்கண் மறையோ ரிறந்தோர்கள், இரவ லாள ருறுப்பிலர்க ளெய்தும் பிணியா

ளர்முதியோர், விரவு பாலர் சிசுதமது மிசையோ ரிவரை யோம்புகவே. கஉ

உரம்பெறு பிரம சரிவனத் துறைவோ ருலகனைத் தையு மற நீத்தோர், பரம்பரன் றெனுது புலத்தவர் விருந்து பசை யுடை யொக்கன்மன் றுறந்தோர், அரம்புசெ யிலம்பாட் டினரிறந் தாரென் றையிரு வரையுநன் கோம்பி, வரம்பெறு தமைப்பி னோம்புந ரல்லா தவர்மனை யறத்தவ ணிலரே. கங

கற்பு.

கற்புடைய பெண்ணமிர்தங் கற்றடங்கி னனமிர்தம்
நற்புடைய நாடமிர்தந் நாட்டுக்கு-நற்புடைய
மேகமே சேருகொடி வேந்தமிர்து சேவகனும்
ஆகவே செய்யி னமிர்து. கச

சிறுகாலை யட்டில்புக லருத்தியுறச் சமைத்தல் சுவை திருத்தி யூட்டன், மறுகாலை யெண்ணுது விருந்தழைத்தன் மக ப்பெறுதன் மடநா ணச்சம், பெறுகாலை யின்புறுதன் முன் னுறங்கப் பின்னுறங்கல் பின்னெழாதல், உறுகாலை தொழு தெழுதல் பன்னிரண்டுங் கற்புடையார்க் குரிய செய்கை.

கற்பின்மை.

அடுத்தமனை தொறுந்திரிவாள் கணவனுணு முன்முண் பா ளடக்க மில்லாள், கடுத்தமொழி பேசிடுவாள் சிறுதனந் தே டுவெளிவளைக் கலந்து வாழ்தல், எடுத்தவிடைக் கொடி யாரே தண்டலையா ரேயெவர்க்கு மின்பமாமோ குடித்தன மே செயவேண்டிப் பிடாரிதனைப் பெண்டுவைத்துக் கொ ண்ட தாமே. கரு

பண்டோராண் பெண்ணமைத்தவ் விருவருக்கு மண்மிய ற்றிப் பரனி ரக்கங், கொண்டளித்த முறைகடந்து கள்ளவ ழிப் புணர்ச்சிசெயுங் கொடியோர் தம்மை, மண்டலமே வா ய்பிளந்து விழுங்காயோ வவர்தலைமேல் வானுலாவுங், கொ ண்டலே பேரிடியை வீழ்த்தாயோ விதிசெயிற் குற்ற முண்டோ. கஎ

மற்றொரு வனைச்சேர் மாதிறந் தாலும் வசைநிற்கு மூலக முள் ளளவும்,சுற்றமும் வாழ்வுந் துணையுமே நீங்குஞ் சோர நாயகனுமே மதியான், பெற்றசந் ததியு மிழிவுறு மாண்ட பின்னுறுங் கொடுவெரி நரகம், சற்றுநே ரங்கொள் சுகத்தினு ல் விளையுந் தன்மையி தரிவையி ருணர்வீர். கஅ

ஒருவரு மறிகிலா ரெனவொ ரொண்ணுதல்
கரவினிற் குமரரைக் கலத்தல் பூசைதன்
இருவிழி மூடிமற் றெவர்கள் பார்வையுந்
தெரிகிலா தெனப்பயன் றிருடலொக்குமே. கசு

வண்டுக ளிருந்திடின் மதுவை யுண்டிடுந்
தண்டமி ழிருந்திடிற் சங்கஞ் சேர்ந்திடுங்
குண்டுணி யிருந்திடிற் கோள்கண் மிஞ்சிடும்
பெண்டுக ளிருந்திடிற் பெரிய சண்டையே. உ௦

தன்னுரை கொளாதமனை வாழ்க்கையது தன்னின்
வெங்கிரயம் வீழும்வகை யேவிழுமி தம்மா
அன்னரொடு மேவியம ராடவர் தமக்குப்
பின்னுமொரு கூற்றுமுள தோபிணியு முண்டோ. உக

எறியென் றெதிர்நிற்பாள் கூற்றஞ்-சிறுகாலை
அட்டிற் புகாதா ளரும்பிணி-அட்டதனை
உண்டி யுதவாதா ளில்வாழ்பே-யிம்மூவர்
கொண்டானைக் கொல்லும்-படை. ௨௨

வாழ்க்கைத்துணைநலம்.

கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி-கொண்டன
செய்வகை செய்வான் றவசி-கொடிதொரீஇ
நல்லவை செய்வா னரச-னிம்மூவர்
பெய்யெனப் பெய்யு-மழை. ௨௩

ஆனை யுரித்து மதனைப் போர்த்திட் டடியும்பட்டு
மான மழிந்தங் கிரந்தே திரிந்த மதுரைச்சொக்கர்
ஞான மிகப்பெற்று வாழ்வதெல்லாஞ்சொக்க நாயகியாள்
பானை பிடித்த முகூர்த்தத்தி னல்வந்த பாக்கியமே ௨௪

நாடு மூரு நனிபுகழ்ந் தேத்தலும்
பீடு றும்மழை பெய்கெனப் பெய்தலும்
கூட லாற்றவர் நல்லது கூறுங்காற்
பாடு சால்மிகு பத்தினிக் காவதே. ௨௫

அன்னை தயையு மடியாள் பணியுமலர்ப்
பொன்னி னழகும் புவிப்பொறையும்-வன்னமுலை
வேசி துயிலும் விறன்மந் திரிமதியும்
பேசி லிவையுடையாள் பெண். ௨௬

மக்கட்பேறு.

கங்குலின் மதிவி ளங்கும் கதித்திடும் பகற்கா லத்தில்
செங்கதிர் விளங்கு மன்றிச் சிறந்திடு முலக மூன்றும்

பொங்கிய தன்மத் தாலே போனது விளங்கு மென்றும்
வங்கிசம் விளங்கு நல்ல மகவினாற் றானுமென்றே உஎ

உந்து நீர்க்கட லுடுத்தபார் முழுவது மொருங்கே
வந்து தாமொழு மரசியல் வளமெலாம் பெறினும்
இந்தி ராதியர் பெரும்பதத் திருக்கையெய் திடினும்
மைந்த ரின்றியே வாழ்வது வாழ்வுமற் றன்றே. உஅ

மைந்தனைப் பெறு கின்றதும் மாசிலாப்
புந்தி யன்பொடு போற்றி வளர்ப்பதுந்
தந்தை மாண்டுழி தம்முறைக் கேற்பன
அந்த மில்கட னாற்றுதற் கேயன்றோ. உகூ

இறைவர் ஞானமு மேதமி லாமையும்
பொறையும் பூண்ட புதல்வர் பெறுவரேல்
மறவ ரேனு மவரையவ் வல்வினை
பிறவி யேழினும் பின்றொட ராதரோ. ௩௰

மக்கட்குத் தந்தைசெய் நலம்.

தீதுநன் கறிகிலாச் சேய ரென்செய்வர்
கோதற வவரைநன் னெறியிற் கூட்டிடா
தேதங்க ளவர்முன்செய் திழிவைக் கற்பிக்கும்
தாதைதாய் புதல்வர்க்குச் சத்து ருக்களே. ௩க

மாலினா லிருவரும் மருவி மாசிலாப்
பாலனைப் பயந்தபின் படிப்பி யாதுயர்
தாலமேற் செல்வமா வளர்த்த றங்கட்கோர்
காலனை வளர்க்கின்ற காட்சி போலுமால். ௩உ

காமக்கொடுமை.

ஊருந் தெழுந்த வுருகெழு செந்தீக்கு
நீருட் குளித்து முயலாகும்-நீருட்
குளிப்பினுங் காமஞ் சுடுமேகுன் றேறி
யொழிப்பினுங் காமஞ் சுடும். ௩௩

அம்பு மழலு மவிர்கதிர் ஞாயிறும்
வெம்பிச் சுடினும் புறஞ்சுடும்-வெம்பிக்
கவற்றி மனத்தைச் சுடுதலாற் காமம்
அவற்றினு மஞ்சப் படும். ௩௪

பைந்தொடியா ராசைநோய் கம்பீர மனிதரையும் பதுமந்
தன்னை, முந்திரவி கதிர்போல மிளிர்விக்குங் கனலிடிபு
முனைக்கூர் வாளும், வெந்தவிருப் புப்பொறியு மெனக்கொ
டிய மனவேட்கை மேரு வொத்த, சுந்தரனா னியர்தீரர் குன்
ரையெல் லாமிமைப்பிற் றுரும்பு செய்யும். ௩௫

அஞ்சன வைவேற்க ணரிவையர்தம் பேராசை
நெஞ்சு புகினொருவர் நீங்கு நிலைமைத்தோ
எஞ்சல்புரி யாதுயிரை யெந்நாளு மீர்ந்திடுமால்
நஞ்சமினி தம்மவோ நாளு நலியாதே. ௩௬

தீமை யுள்ளன யாவையுந் தந்திடுஞ் சிறப்பும்
தோமில் செல்வமுங் கெடுக்குநல் லுணர்வினைத் தொலைக்கும்
ஏம நன்னெறி தடுத்திரு ளுய்த்திடு மிதனால்
காம மன்றியே யொருபகை யுண்டுகொல் கருதில். ௩௭

நன்றியைக் கோறலு நலனைக் கோறலும்
வென்றியைக் கோறலும் விவேகங் கோறலும்

தூன்றிய வொக்கலைத் துறந்து நிற்றலும்
கன்றிய காமத்தி னன்றி யில்லையே. ௩௮

பகையினை யாக்கலும் பாவ மாக்கலும்
நகையினை யாக்கலு நவையை யாக்கலும்
திகைமன மாக்கலுஞ் சிறுமை யாக்கலு
நகைதரு காமத்தி னன்றி யில்லையே. ௩௯

கைதவ மிழைத்தலுங் களவு செய்தலும்
ஐயுயிர் கோறலு மறத்தைக் கோறலும்
பொய்தவ வுரைத்தலும் பொருளி ழத்தலும்
எய்திய காமத்தி னன்றி யில்லையே. ௪௰

காமத்தா லிந்திரன் கலக்க மெய்தினன்
காமத்தா லிராவணன் கருத்த ழிந்தனன்
காமத்தாற் கீசகன் கவலை யுற்றனன்
காமத்தா லிறந்தவர் கணக்கி லார்களே. ௪௧

உணாங்கி யொருகான் முடமாகி யோர்கண் ணிழந்து செவியின்றி, [illegible]கு நெடுவா லறுப்புண்டு வயிறு முதுகி னுயர்ந்தொட்[illegible]ணங்கு நலிய மூப்பெய்தி யகல்வா யோடு கழுத்தே[illegible], சுணங்கன் முடுவ லதைத்தொடர்ந்தா லெவரைக் கா[illegible]யர்செய்யான். ௪௨

நிட்டை[illegible] யிருந்துமனத் துறவடைந்த பெரியோர்கணிமலன் [illegible]க், கிட்டையிலே தொடுத்துமுத்தி பெறுமளவும் பெரிய[illegible] கிடைக்குங் காம, வெட்டையிலே மதிமயங்குஞ் சிறு[illegible]த மணம்பேசி விரும்பித் தாலி, கட்டை

யிலே தொடுத்துநடுக் கட்டையிலே கிடத்துமட்டுங் கவலை தானே. சங

கோபக்கொடுமை.

கோபத்தாற் கௌசிகன் றவத்தைக் கொட்டினுன்
கோபத்தா னகுடனுங் கோல மாற்றினுன்
கோபத்தா லிந்திரன் குலிசம் போக்கினுன்
கோபத்தா லிறந்தவர் கோடி கோடியே. சச

வெகுளியே யுயிர்க்கெலாம் விளைக்குந் தீவினை
வெகுளியே குணந்தவம் விரத மாய்க்குமால்
வெகுளியே யறிவினைச் சிதைக்கும் வெம்மைசால்
வெகுளியிற் கொடும்பகை வேறென் றில்லையால். சரு

பெரியவர் தம்மைக் காய்ந்தான் பிறங்கல்கல் லியகோ லொப்பான், புரிவன புரியப் பட்டுப் புலம்புய னைத்தார்க்காய்ந்தான், எரிநர கத்தில் வீழ்வ னிழிந்தவர்க் காய்ந்தானென்றால், ஒருவர்த மிடத்துஞ் சீற்ற முறுமையே நன்றுமாதோ. சசா

மூங்கிலிற் பிறந்து முழங்குதீ மூங்கின் முதலற முறுக்குமா போலத், தாங்கருஞ் சினத்தி தன்னுளே பிறந்து தன்னுறு கிளையெலாஞ் சாய்க்கும், ஆங்கதன் வெம்மை யறிந்தவர் கமையா லதனையுள் ளடக்கவு மடங்கா, தோங்கிய கோபத் தீயினை யொக்கு முட்பகை யுலகில்வே றுண்டோ. சஎ

உலோபக்கொடுமை.

பொலிவளந் தங்கிய புவிபிற் றுனுண்டும்
பலிபிறர்க் கிட்டுமே பயின்றுவ் வான்பொருள்

வலியிலாப் பேடிகை வாள்கொ லாமென்ன
அலியினை மேவிய வரம்பை யேகொலோ. ௪அ

கொழுநனைப் பழித்த கோதை குழவியைக் கணவ னேந்தி
அழுமதற் கிரங்கி யாற்ற வவணகைத் திடுதல் போல
எழுதுமுத் தமிழோர்க் கியா ரிருநிதி தன்னைத் தேடிப்
பழுதறப் புதைப்பக் கண்டு பார்மக ணகைக்கின் றாளே. ()

எண்ணான்கு முப்பத் திரண்டுபற் காட்டி யிசைவுடனே
பண்ணாகிச் செந்தமிழ்ப் பாடிவந் தாலுமிப் பாரி லுள்ளோர்
அண்ணாந்து கேட்ப ரழகழ கென்ப ரதன்பிறகு
சுண்ணாம்பு பட்ட விலையுங் கொடார்கவி சொன்ன வர்க்கே.

மண்ணார் சட்டி கரத்தேந்தி மரநாய் கவ்வுங் காலினராய்,
அண்ணாந் தோடி யிரப்பாரை யறிந்தோ மறிந்தோ மம்மம்
மா, பண்ணார் மொழியார் பாலடிசில் பைம்பொற் கலத்திற்
பரிந்தூட்ட, உண்ணா நின்றே யொருவருக்கு முதவா மாந்த
ரிவர்தாமே. ௫௧

வாருநீ ராரென்ன வித்துவா னென்னலு மதிமோசம் வந்
ததென்றே, வாய்குளறி மெய்யெலா நடுநடுக் குற்றுபின் வ
ந்தகா ரியமேதெனச்,—சீருலா வியகாம தேனுவே தாருவே
சிந்தாம ணிக்குநிகரே, செப்புவச னத்தரிச் சந்த்ரனே யெ
ன்னலுஞ் சினந்திருக ணுஞ்சிவந்து,—ஆரைநீ மாடுகன் மர
மென்றுரைத்தனை யலாதரிச் சந்த்ரனென்றே, யடாதசொற்
சொற்றனை யார்க்கடிமை யாயினோம் யார்கையிற் பெண்டை
விற்றோம், தீருமோ விந்தவசை யென்றென்று மீயாத தீய

ரைப் பாடாதருள், திருமன்று ணடுநின்று நடமொன்று புரி
கின்ற தென்றில்லை நடராஜனே. ௫௨

இடுக்கினால் வறுமை யாகி யேற்றவர்க் கிசைந்த செல்வம்
கொடுப்பதே மிகவு நன்று குற்றமே யன்றி வாழ்வார்
தடுத்ததை விலக்கி னோர்க்குத் தக்கநோய் பிணி களாகி
உடுக்கவே யாடை யின்றி யுண்சோறும் வெல்ல மாமே. ௫௩

அவாவின் கொடுமை.

கள்ளிக்கு மாலாக்கி காற்கு விலங்காக்கிப்
பிள்ளைக் கடையாணிப் பின்னிறுக்கிப்-பொல்லாக்
கடுமிடற்றன் சோணேசன் கற்பித் துயிரைப்
படுகுழியிற் பாச்சுவதைப் பார். ௫௪

ஆசையெனும் பாசத்தா லாடவர்தஞ் சிந்தைதனை
வீசிமனை யாந்தறியில் வீழ்த்தியே-மாசுபுரி
மாயா மனைவியரா மக்கண் மகவென்னும்
நாயாற் கடிப்பித்த னடு. ௫௫

எவரை யும்மனந் திரிப்பது மீன்றவர் தமக்குத்
தவறி ழைத்திடப் புரிவதுந் தையலார் தங்கள்
கவறில் கற்பினை யிழப்பதுங் கற்குநூற் கலைகள்
அவையெ லாங்கெடக் கெடுப்பதும் பொருள்விருப் பன்றே.

ஆசையாற் சந்திர னங்கந் தேய்ந்தனன்
ஆசையாற் சௌபரி யறிவை நீங்கினன்
ஆசையா னராசுர னாவி போக்கினன்
ஆசையால் வாலியு மழிந்து போயினன். ௫௭

செருக்கின் கொடுமை.

கற்றதுகைம் மண்ணளவு கல்லா துலகளவென்
றுற்ற கலைமடந்தை யோதுகிறாள்-மெத்த
வெறும்பந் தயங்கூற வேண்டாம் புலவீர்
எறும்புந்தன் கையாலெண் சாண். ௫௮

ஏர்பெறு மிருநிதிச் செருக்க தெய்திடிற்
றேர்செவி யுடையவர் செவிட ராகுவர்
ஓர்தரு முரைவலா ரூமை யாகுவர்
கூர்விழி யுடையவர் குருட ராவரே. ௫௯

தனித்தனி முச்சுட ரியற்றித் தங்கிய
வனைத்துல கிருளையு மகற்று நான்முகன்
நினைப்பருஞ் செல்வம்வந் தெய்தி னீடிய
மனச்செருக் கெனுமிரு ளகற்ற வல்லனே. ௬௰

செல்வம்வந் துற்றபோது தெய்வமுஞ் சிறிதுபேணார்
சொல்வதை யறிந்து சொல்லார் சுற்றமுந் துணையும் பேணார்
வெல்வதே கரும மல்லால் வெம்பகை வலிதென் றெண்ணார்
வல்வினை விளைவும் பாரார் மண்ணின்மேல் வாழு மாந்தர். ௬௧

சிறியரே மதிக்கு மிந்தச் செல்வம்வந் துற்ற ஞான்றே
வறியபுன் செருக்கு மூடி வாயுள்ளார் மூகராவர்
பறியணி செவியுள்ளாரும் பயிறருஞ் செவிடராவர்
குறிபெறுங் கண்ணு ளாருங் குருடராய் முடிவ ரன்றே ௬௨

பகைக் கொடுமை.

எற்றெழு வன்னிமே லினிது துஞ்சலாம்
தோற்றிய வெவ்விட மெனினுந் துய்க்கலாம்

மாற்றல ரலைத்திட வந்த வெந்துயர்
ஆற்றரி தாற்றரி தலமிப் புன்மையே. ௬௪

தாய்பகை பிறர்நட் பாகிற் றந்தையும் ருணவா னாகில்
வாய்பகை மனைவி யாரு மாவழ குற்றபோது
பேய்பகை பிள்ளை தானும் பெருமைநூல் கல்லா விட்டால்
சேய்பகை யொருவர்க்காகு மென்றனர் தெளிந்த நூலோர்.

மெலிய தெனவெள் ளியபகையே மிகுந்து கெடுக்கு மிரு
ந்திடுமுன், நலிக வினைதாழ் வுறிற்றெளிந்த நல்லா ரெனவுந்
தெளியாத, மலின ரெனவு நொதுமலரை மருவ லொழிதல்
புரியற்க, வலிசெய் பகையா திகள்பெருக்கி வகையாய்ந்
திருக்க பகைமையற. ௬௫

பொய்க் கொடுமை.

தான்கெடினுந் தக்கார்க்கே டெண்ணற்க தன்னுடம்பி
னூன்கெடினு முண்ணார்கைத் துண்ணற்க-வான்கவிந்த
வையக மெல்லாம் பெறினு முரையற்க
பொய்யோ டிடைமிடைந்த சொல். ௬௬

மெய்யதைச் சொல்வா ராகில் விளங்கிடு மேலு நன்மை
வையக மதனைக் கொள்வார் மனிதரிற் றேவ ராவார்
பொய்யதைச் சொல்வா ராகிற் போசன மற்ப மாகும்
நொய்யவ ரிவர்க ளென்று நோக்கிடா ரறிவுள்ளோரே. ( )

பொய்யருக்குப் பொய்யுரைத்தால் வெற்றியா மவருக்குப்
பொய்யா காத, மெய்யருக்குப் பொய்யுரைத்தாற் றேய்பிறை
போற் றவங்குறையு மிடியுண் டாகும், துய்யதாய் தந்தைய

ர்க்குப் பொய்புரைத்தால் வறுமைபிணி தொலையா வென்று
ம்,உய்யவரு டேசிகற்குப் பொய்புரைத்தா னரகமது வுண்
மை தானே. ௬௮

ஆயத்துறையிற் பிறந்துவந் தந்தணர்பால் குடித்து
மாயக்கண் வேசையிடத் தேவளர்ந்து வண்ணனொருநாள்
ஏயப் புலவரிடத் தெட்டுநாள் செட்டியே னென்றபின்
போயக்க சாலை புகுந்தனள் காணந்தப் பொய்மகளே. ௬௯

பூசாரி பொய்யும் புலவோ ருரைத்த பொய்யும்
காசாசை வேசையர்கள் கற்றபொய்யும் - கூசாமல்
தட்டா ருரைத்த பொய்யுஞ் சவுளிக் கடைப் பொய்க்குக்
கட்டாது கால்வரிசை காண். ௭௰

பிறர்மனை நயத்தல்.

உணர்வறுஞ் செல்வமு முயர்வு மேயறும்
குணமறுங் குலமறுங் கொடிய நோயெலா
மணவுறு நரகுறு மாயு டேயுமால்
கணமறு மாதர்தோள் கலக்குந் தூர்த்தர்க்கே. ௭௧

மிக்க மென்றசை யிருந்திட வெற்றெலும் பதனைத்
தக்க தென்றுபுன் ஞமலிகள் களித்தன தளர்ந்து
துக்க மொன்றுமி றம்மனை துறந்துபோய்ப் பிறரில்
புக்கு வெந்துயர்க் கடற்படு மிழுதைகள் போல. ௭௨

பிறமனைக்குரிய பேதையுரி டத்து விழைவாய்க்
குறுகு காலிணைகு றைத்திடுதி கொம்மை முலைமேல்

இருகுறத்தழுவு கைபிணையை யீர்தி யவர்மேல்
உறுசி னத்திலொடு மூசிக ணிறுத் திடுதியால். ௭௩

பெண்புத்திகேட்டற்பிழை.

தன்னைப் புகழ்வானுஞ் சாட்சிசொல்லி நிற்பானும்
பொன்னைமிகத் தேடிப் புதைப்பானும்-ஒன்னலர்தம்
நண்புத்தி கேட்பானு நாணமில்லா தானும்
பெண்புத்தி கேட்பானும் பேய். ௭௪

பெண்டுகள்சொற் கேட்கின்ற பேயர்களே குணமுடைப்
பேடி லோபர், முண்டைகளுக் கிணையில்லா முனைவீரர் புரு
டரென மொழியொணுதே, உண்டுலக முதிப்பாருள் கீர்த்தி
யற மின்னதென வுணர்வே யில்லார், அண்டினவர் தமைக்
கெடுப்பா ரழிவழக்கே சொல்வதவ ரறிவு தானே. ௭௫

மங்கைகைகை சொற்கேட்டு மன்னர்புகழ் தசரதனு ம
ரணமானுன், செங்கமலச் சீதைசொல்லை சீராமன் கேட்டவு
டன் சென்ருன் மான்பின், தங்கையவள் சொற்கேட்ட விரா
வணனுங் கிளையோடு தானு மாண்டான், நங்கையர்சொற்
கேட்பதெல்லாங் கேடுவரும் பேருலகோர் நகைப்பார் தாமே.

மாதுசித்தி ராங்கிசொல்லான் மைந்தனைக்கை கால்களைந்து
ஏதுபெற்ருேர்மன்ன னிப்புவியில்-நீதிநெறி
மாதவனே புன்னை வனநாதா பாகைமன்னு
வதெனினுந் தையல் சொற்கேளேல். ௭௬

தீமைசெய்தலின் பயன்.

மூடனை மூர்க்கன் கொன்றால் மூர்க்கனை முனிதான் கொல்லும், மடவனை வலியான் கொன்றால் மறலிதா னவனைக் கொல்லும், தடவரை முலைமா தேயித் தரணியி லுள்ளோர்க் கெல்லாம், மறவனை யடித்தகோலும் வலுவனை யடிக்குங் கண்டாய். எஅ

ஏற்றலி னிழிவு

பல்லெலாந் தெரியக் காட்டி பருவரன் முகத்திற் கூட்டிச்
சொல்லெலாஞ் சொல்லி நாட்டித் துணைக்கரம் விரித்து நீட்டி
மல்லெலா மகல வோட்டி மானமென் பதனை விட்டி
இல்லெலா மிரத்த லந்தோ விழிவிழி வெந்தனொன்றும். எகூ

கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான் குடிக்கத்தான் கற்பித்தானா, இல்லைத்தான் பொன்னைத்தா னெனக்குத்தான் கொடுத்துத்தா னிரட்சித்தானா, அல்லைத்தான் சொல்லித்தா னியாரைத்தா னோவத்தானையோ வெங்கும், பல்லைத்தான் றிறக்கத்தான் பதுமத்தான் புவியிற்றான் பண்ணினானே.

மாவலிபான் மண்ணிரக்க யாதவனே வாமவுரு
ஆமென்றான் மற்றவர்க்க தாகுமோ-மூவுலகிற்
பேர்பரவு புன்னைவனப் பேரரசே யெவ்வகையாற்
சீர்பெறினு மேற்ப திகழ்ச்சி. அக

கல்விப்பெருமை

அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டு-முறுங்கவலொன்

றற்றழியுங் கைகொடுக்குங் கல்வியி னூங்கில்லைச்
சிற்றுயிர்க் குற்ற துணை. அ௨

கல்வியே நல்லுயிரைக் காப்பதற்கு நற்றுணையாம்
கல்வியே நல்லுடம்பைக் காப்பதாம் - கல்வியே
செல்வப் பொருளின்பஞ் சேர்க்குந் தலைமைசேர்
செல்வமாஞ் செய்யுஞ் சிறப்பு. அ௩

மனைக்கு விளக்க மடவாள் மடவாள்
தனக்குத் தகைசால் புதல்வர் - மனக்கினிய
காதற் புதல்வர்க்குக் கல்வியே கல்விக்கங்
கோதிற் புகழ்சா லுணர்வு. அ௪

தேசிக மெவ்வ னங்கள் சிறந்தநற் கலங்கண் மிக்க
காசினி யிரதஞ் சொன்னங் கரிபரி படைத்தோ ரேனும்
நேசமாம் வித்தையற்றா னிறைந்திடு முருக்கம் பூப்போல்
வாசனையிலாம னின்று மயங்கிடு வாராமன்றே. அ௫

வெள்ளத்தா லழியாது வெந்தணலால் வேகாது வேந்த ராலுங், கொள்ளத்தான் முடியாது கொடுத்தாலு நிறைவன்றிக் குறைவி ராது, கள்ளர்க்கோ பயமில்லை காவலுக்கோ மிகவெளிது கல்வி யென்னும், உள்ளபொரு ளுள்ளிருக்கப் புறம்பாகப் பொருடேடி யுழல்கின் றாரே. அ௬

வெள்ளத்தே போகாது வெந்தணலில் வேகாது
கொள்ளத்தான் போகாது கொடுத்தாலுங் குறையாது
கள்ளருக்கு மெட்டாது காவலுக்கு ளமையாது
உள்ளத்தே பொருளிருக்க வூரிலுழைத் துழல்வானேன். ()

கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினும்
மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான்-மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோன் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யு முடம்பு. (அஅ)

கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக. அ௯

எண்ணென்ப வேனையெழுத்தென்ப விவ்விரண்டுங்
கண்ணென்ப வாழு முயிர்க்கு. ௯௰

வித்தையைப் பயிலாநாள்.

அட்டமிபி லோதினு லாசானுக் காகாது
சிட்டருக்குப் பன்னான்கு தீதாகும் - கெட்டவுவா
வித்தைக்கு நாசமாம் வெய்ய பிரதமையிற்
பித்தரும் பேசார் பிழை. ௯௧

அறச்சிறப்பு,

வேடமு நீறுஞ் சாத்தி வேதநூல் மிகவுங் கற்றே
ஏடவிழ் குழலாள் பங்க னீசனுக் கடிமை யார்க்குப்
போடவே வேண்டு மன்னம் பொறுக்கவே வேண்டுங்குற்றம்
தேடவே வேண்டு நன்மை செய்யவே வேண்டுந் தர்மம். ()

தருமமென் றொருபொரு ளுளது தாவிலா
இருமையி னின்பமு மெளிதி னாக்குமால்
அருமையில் வரும்பொரு ளாகு மன்னதும்
ஒருமையி னோர்க்கலா லுணர்தற் கொண்ணுமோ. ௯௩

சிலப்பதிகாரம்.

நாளைச் செய்குவ மறமெனி லின்றே
கேள்வி நல்லுயிர் நீங்கினும் நீங்கும்
இதுவென வரைந்து வாழுநா ளுணர்ந்தோர்
முதுநீ ருலகின் முழுவது மில்லை. கூச

பசிமிகுந்த பின்னெல்லை விதைப்பதுபோல் விட்டிடைத் தீப் பற்றிக் கொண்டு, நசியும்போ ததையவிக்க வாறுவெட்டல் போலும்போர் நடக்குங் காலை, விசிகநூல் கற்கமுயல் வதுபோலுங் கபமிஞ்சி விக்கிச் சிக்கி, இசிவுகொண்டு சாங் காலத் தெப்படிநீ யறம்புரிவா யிதயப் பேயே. கூரு

இன்றருணோ தயங்கண்டோ முயர்ககன முகட்டின்மிசை யிந்தப் பானு, சென்றடைய நாங்காண்ப தையமதைக் காண் இனுமேற் றிசையி ருக்கும், குன்றடையு மளவுநா முயிர் வாழ்வ தரிததின்முன் குறுகுங் கூற்றம், என்றச்சத்துடன்மன மே மறவாம லறவழியி லேகுவாயே. கூசா

தன்னுட லினுக்கொன் றீந்தாற் றக்கதோர் பலம தாகும்
மின்னியல் வேசிக் கீந்தான் மெய்யினில் வியாதி யாகும்
மன்னிய வுறவர்க் கீந்தால் வருவது மயக்க மாகும்
அன்னிய பரத்துக் கீந்தா லாயிருர்க் குதவியாமே. கூஎ

எய்தற்கரிய யாக்கைதனக் கெய்திற் றென்று லதுகொண்டு, செய்தற்கரிய வறங்கள்பல செய்து துயர்கூர் பிறவியினின், றுய்தற்கொருமை பெறவொண்ணு தழல்வோ னுடம்பு பொற்கலத்திற், பெய்தற்கரிய பால்கமிற் பெய்த தொக்கு மென்பரால். கூஅ

கைப்பொருள் பெற்ற ஞான்றே கடவுளா லயத்திற் கீந்து
மெய்ப்படு புராண நூல்கள் விருப்பொடு கேட்டு வந்து
வைப்பென விரப்போர்க் கீந்து வருபவ ருளரேற் கூற்ற
மொய்ப்புயத் தண்டந் தப்பி முன்னவ னின்பத் தாழ்வார்.()

அன்புறு மறத்தினு லடுக்கு மின்பமே
இன்பெனத் தக்கதா லேனை யின்பெலாம்
துன்பமும் பழியையுந் தோற்று மாதலால்
வன்புறு மறத்தினை மறப்பிற் கேடுறும்.

வைத்ததனை வைப்பென் றுணரற்க தாமதனைத்
துய்த்து வழங்கி யிருபாலு மத்தகத்
தக்குழி நோக்கி யறஞ்செய்யி னஃதன்றே
எய்ப்பினில் வைப்பென் பது, ௩௧

ஈகையின்பெருமை.

கொடையே யெவர்க்கு மெப்பேறுங் கொடுக்கு நெறியிற் பிறழாத, கொடையே யாருந் தன்வழியி னொழுகச் செய்யுங் குறைதீர்ந்த. கொடையே பகையை யுறவாக்குங் குலவும்பூத மனைத்தினையும். கொடையே புரக்கு மென்றுள்ளங் கொள்ளப் புகன்றான் கவுதமனே.

திரவியம் வந்த போது சேர்ந்தபல் லோர்க்கு மீந்தால்
வரவர வளமா மந்த வகைசெயா விடிற்கெட்டேகும்
ஒருகலிங் கினைவிட் டக்கா லோதநீர் போக்குப் போகும்
பெருகுறு மேரி யில்லா விடினடு வணையைப் போக்கும். ௩௩

கவளமுண் களிப்புக் கொள்ளுங் காலையில் வாயிற் சிந்தித்
தவறிய பருக்கை யாலத் தந்திக்குச் சேத முண்டோ

உவமையி லெறும்பு கோடி யுடலது நிறையு மென்னில்
தவமதை யறிந்த பேர்கள் தாங்குவா ரிளைத்தோர் தம்மை.()

மடுத்தபா வாணர் தக்கோர் மறையவ ரிரப்போர்க் கெல்லாந். கொடுத்தெவர் வறுமை யுற்றார் கொடாதுவாழ்ந் தவரார் மண்மேல், எடுத்துநா டுண்டநீரு மெடாதகாட் டகத்துநீரும், அடுத்தகோ டையிலே வற்றி யல்லதிற் பெருகுந் தானே. ௩௫

சீதல்வந் தடுத்த காலுந் தனக்கொரு சாத லின்றிப்
பூதல மிறக்குங் காலும் புகழுடம் பிருக்கு மந்தக்
கோதறு புகழின் யாக்கை கொடையினாற் செல்வங் கூற
வாழ்தலை யுடையா ரன்றே மானமும் வணங்கு நீரார். ௩௬

பேடையைப் பிடித்துத் தன்னைப் பிடிக்கவந் தடைந்தபோது
வேடனுக் குதவி யாக விறகினால் வெந்தீ மூட்டிச்
சாடுறும் பசியை நீக்கித் தன்னுயிர் கொடுத்த பைம்புள்
வீடுபெற் றுயர்ந்த வார்த்தை வேதத்தில் விழுமி தன்றே.

என்னானு மோருதவி யாதொருவன் யார்க்கெனினுந்
தன்னான் முடிவதெனிற் றானே முடித்தறலை
சொன்னான் முடித்த லிடையாகுஞ் சொல்லுகினும்
பன்னான் மறுத்துப் புரிதல்கடைப் பான்மையதே. ௩௮

நல்லா றெனினுங் கொளறீது மேலுலக
மில்லெனினு மீதலே நன்று. ௩௯

ஈத்துவக்கு மின்ப மறியார்கொ லுமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர். ௪0

புகழின்பெருமை.

பூதலத்தின் மானிடராய்ப் பிறப்பதரி தெனப்புகல்வர் பிறந்தோர் தாமும், ஆதிமறை நூலின்முறை யருள்கீர்த்தி யெலாந்தங்க வன்பாய்ச் செய்து, நீதிவழு வாதவகை வழக்குரைத்து நல்லோரை நேயங் கொண்டு, காதவழி பேரில்லான் கழுதையெனப் பாரிலுள்ளோர் கருதுவாரே. ருயக

நேசனைக்கா ணாவிடத்து நெஞ்சார வேதுதித்தல்
ஆசானை யெவ்விடத்து மப்படியே - வாச
மனையாளைப் பஞ்சணையின் மைந்தர்தமை நெஞ்சில்
வினையாளை வேலைமுடி வில். ருயஉ

விருந்தின் பெருமை.

விருந்து புரந்தரான் வேளாண்மை செய்யான்
பெருந்தக் கவரையும் பேணான் - பிரிந்துபோய்
கல்லான் கடுவினை மேற்கொண் டொழுகுமேல்
இல்வாழ்க்கை யென்ப திருள். ருயரு

விருந்தினனாக வொருவன்வந் தெதிரின் வியத்தனன் மொழியினி துரைத்தல், திருந்துற நோக்கல் வருகென வுரைத்த லெழுதன்முன் மகிழ்வன செப்பல், பொருந்துமற் றவன்றனருகுற விருத்தல் போமெனிற் பின்செல்வ தாதல், பரிந்து நன்முகமன் வழங்கலிவ் வொன்பா னொழுக்கமும் வழிபடும் பண்பே. ருயச

அருந்தவே கூழும் பூண வாடையும் வீடு மின்றி
வருந்துவோ ரெண்ணி லார்நம் மருங்குளா ரெனவ றிந்தும்

விருந்திடாய் மணிமாடத்து மேவிநீ யொருவன் வாழப்
பொருந்தினுய் மனமே மக்கட் போலிநீ விலங்கனுயே. ௱௰௫

செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பா
னல்விருந்து வானத் தவர்க்கு. ௱௰௬

இணைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
றுணைத்துணை வேள்விப் பயன். ௱௰௭

அன்பின்பெருமை.

இடனும் பொருளு மேவலரு மிருந்தும் பயனென் னுமு வந்த, வுடலின் பயனு கியவறத்தை வுருதவிடத்து னொது மலரும், படர்செய் பகையு முறவாக்கும் பற்றுமளிக்கு மனை மைந்தர், தொடர்பின் வளர்க்கு மன்பதனுற் சோர்ந்து மன் பின் வழுவற்க. ௱௰௮

கலையெலா முணர்ந்தா னேனுங் கரிசறத் தெளிந்தா னேனும்
மலையென வுயர்ந்தா னேனு மனமய லகன்ரு னேனும்
உலகெலாம் புகழப் பல்லோர்க் குதவிய கைய னேனும்
இலகிய விரக்க மின்றே லெழுநர கடைவ னன்றே. ௱௰௯

என்பு தோலுடை யார்க்குமி லார்க்குந்தம்
வன்ப கைப்புலன் மாசற மாய்ப்பதென்
முன்பும் பின்பின்றி மூவுல கத்தினும்
அன்பி னல்லதோ ராக்கமுண் டாகுமோ. ௱௨௰

தோன்ரு வகைகரந்துந் தோன்றலைக்கண் டுண்ணெகிழ்ந்து
தோன்றநின்ருன் முன்புநளன் சோமேசா-தோன்றுகின்ற

அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர்
புன்கணீர் பூச றரும். ௱௨௰௧

ஆதர வுடையான் செய்யு மல்லவு நல்ல வாகும்
ஆதர விலாதான் செய்யு நல்லவு மல்ல வாகும்
ஆதர வதனலாவிக் கருந்துணை யின்ப முத்தி
ஆதர வலாது வேறொன் றளித்திடக் கண்டதுண்டோ. ()

அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையார்
என்பு முரியர் பிறர்க்கு. ௱௨௩

என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை யறம். ௱௨௪

அன்பின்மை.

இறைவனை யமைச்சனு யிருந்து செற்றவர்
கறவைகள் பருகுநீர்க் கயங்க டேர்த்தவர்
பொறைவனக் கிளிகளும் வளர்க்கும் பூவையும்
சிறைபடுத் தவரெலாந் துயரிற் றீர்வரோ. ௱௨௫

அன்னமு மியற்றிய வறனும் விற்றவர்
கொன்னவன் மறையினூல் கூலிக் கீந்தவர்
முன்னகை செய்துபின் பகைமொ ழிந்தவர்
சொன்னவை வழுக்குநர் துறக்க மாள்வரோ. ௱௨௬

தேவ ருக்கென விரந்துண் ணுந் தியவர்
யாவ ருக்கும் படுநிந்தை யேற்றுநர்
காவெ னப்பிறர் வைத்தவை கைக்கொளும்
பாவ ரப்பழி பாற்றவும் வல்லரோ. ௱௨௭

விரிகொன்றை, வெறிந றுந்தொடை யெம்பிரான் சார்பினை
விழைதலா லுரகங்கண், மறுவி லாற்றல்சால் கலுழனை விரு
யின வாழ்ந்தனை யோவென்ன. ௬௩அ

பெரியாரின்றுணைபெறுதல்.

தந்தை யிரணியனைத் தள்ளிப்பிர கலாதன்
சிந்தையின்மா யன்றுணையே தேடினான்-சந்ததமும்
நட்பறியும் புன்னைவன நாதமகி பாவுலகிற்
குட்பெரியா ரைத்துணைக் கொள். ௬௩௯

ஊரங் கணநீ ருரவுநீர்ச் சேர்ந்தக்காற்
பேரும் பிறிதாகித் தீர்த்தமா-மோருங்
குலமாட்சி யில்லாருங் குன்றுபோ னிற்பர்
நலமாட்சி நல்லாரைச் சார்ந்து ௬௪௰

உற்றநோய் நீக்கி யுறுஅமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல். ௬௪௧

தம்மிற் பெரியார் தமரா வொழுகுதல்
வன்மையு ளெல்லாந் தலை. ௬௪௨

பயனற்றவை.

தெருளிலாக் கலையினோர் செருக்கு மாண்மையும்
பொருளிலா வறிஞர்தம் பொறிய டக்கமும்
அருளிலா வறிஞர்த மௌன வாழ்க்கையுங்
கருவிலா மங்கையர் கற்பு மொக்குமால். ௬௪௩

ஆபத்துக் குதவாப் பிள்ளை யரும்பசிக் குதவா வன்னந்
தாபத்தைத் தீராத் தண்ணீர் தரித்திர மறியாப் பெண்டிர்

கோபத்தை யடக்காவேந்தன் குருமொழி கொள்ளாச் சீடன்
பாபத்தைத் தீராத் தீர்த்தம் பயனில்லை யேழுந்தானே. ()

சந்திர னில்லா வானந் தாமரை யில்லாப் பொய்கை
மந்திரி யில்லா வேந்தன் மதகரி யிலலாச் சேனை
சுந்தரப் புலவ ரில்லாத் தொல்சபை சுதரில் வாழ்வு
தந்திக ளில்லா வீணை தனமிலா மங்கை போலாம். ௱௪௫

மாடில்லான் வாழ்வு மதியில்லா வாணிபமும்
நாடில்லான் செங்கோ னடாத்துவதும் - கூடுங்
குருவில்லா வித்தை குணமில்லாப் பெண்டும்
விருந்தில்லா வீடும் விழல். ௱௪௬

கெற்பந்தான் மங்கையருக் கழகு குன்றுங்-கேள்வி யில்லா வரசனா லுலகம் பாழாம், துற்புத்தி மந்திரியா லரசுக் கீனஞ்-சொற்கேளாப் பிள்ளைகளாற் குலத்துக்கீனம், நற்புத்தி கற்பித்தா லற்பர் கேளார்-நன்மை செய்யத் தீமையுட னயந்துசொல்வார், அற்பரோடிணங்கிவிடிற் பெருமைதாழு-மரியதவங் கோபத்தா லழிந்துபோமே. ௱௪௭

திருப்பதி மிதியாப் பாதஞ் சிவனடி வணங்காச் சென்னி
இரப்பவர்க் கீயாக் கைக ளினியசொற் கேளாக்காது
புரப்பவர் தங்கள் கண்ணீர் பொழிதரச் சாகாத்தேகம்
இருப்பினும் பயனென் காட்டி லெரிப்பினு மில்லைதானே. ()

தெருளுறக் கற்றிலார் செருக்கி லாததும்
பொருளிலா வறிஞர்தம் பொறி யடக்கமும்
மருளுறு மூகர்த மென்ன சாதமும்
உருவிலா மடந்தையர் கற்பு மொக்குமால். ௱௪௯

சோமனுடா வாழ்வுஞ் சோறிடா நல்லுறவும்
நாமநீ றில்லாத நன்னுதலும் - ஓம
நெருப்பில்லா வேதியரு நெய்பா லுடனே
பருப்பில்லாப் போசனமும் பாழ். ௬௰

கடன்படு பிதாவுமெங்குங் கண்டவர் தங்கட்கெல்லாம்
உடன்படு மன்னை தானு முயர்ந்திடும் ரூபந்தானே
அடர்ந்திடும் பாரி வித்தை யப்பியாசி யாத பிள்ளை
தடங்கணு யிவர்க ளுல்வர் சத்துரு வாவர் தாமே. ௬௧

தண்டுகொண் டோட்டினும் போகாது நம்மைத் தரிசிக்கவே, பண்டுவந் தோர்க்கின்று தாம்பூலம் வைத்துப் பரிந்தழைத்தும், திண்டுமிண்டுஞ்சொல்லி வாராதொழிந்தனர் செய்கையெல்லாம், கண்டுகொண் டோமினித் தொண்டுகொண் டோரங் கடவுளுக்கே. ௬௨

ஒழுக்கம்.

தாழ்ந்த வருணத் துதித்தோருந் தக்கோராவ ரொழுக்கத்தால், வீழ்ந்த வொழுக்கத் தாரிழிவர் மேலாம் வருணத் துதித்திடினுஞ், சூழ்ந்த துணையாஞ் சிறப்பின்பஞ் சுரக்கு மதனு லுயிர்தனினும்; வாழ்ந்த வொழுக்க மோம்பிடுக வழுக்கி னிடும்பை யேதருமே. ௬௩

புண்ணிய நன்னீராடல் கடவுளர் பூசையாற்றல்
உண்ணிறை மகிழ்ச்சி வேத பாரகர் கூட்டறிய
கண்ணய வாமை கள்ளா தொழுகுதல் கடுஞ்சொ லின்மை
எண்ணிய விவைக ளுன்கு குலத்திற்கு மியைந்த வாமால் ()

நேசநல் வாச மீகை சத்திய நித்தம் வேண்டும்
மாசிலா மேலோர் தம்மை மகிழ்ந்துபூ சிக்க வேண்டும்
தேசமுஞ் சிறக்க நீதி செய்திட வேண்டு மென்று
மாசற வுரைத்த நீதி யறிவித்தே னவனுக் கென்றான். ௱௫௫

தாரணிபோ லெவ்வுயிருந் தாங்குந் தகைமையதாச்
சீரணிந்து நாளுஞ் சிறந்தோங்க - வாரந்
தழைத்தபுகழ் புன்னைவனத் தாடாளா யார்க்குங்
குழைந்தொப் புரவொழு கு. ௱௫௬

தீயனவே சொல்லுஞ் சிசுபாலன் முன்புகண்ணன்
றாயதலாச் சொல்லுரையான் சோமேசா - வாயின்
ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல். ௱௫௭

ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்க
முயிரினு மோம்பப் படும். ௱௫௮

அடக்கமுடைமை.

இளையா னடக்க மடக்கங் கிளைபொரு
ளில்லான் கொடையே கொடைப்பயன் - எல்லா
மொறுக்கு மதுகை யுரனுடை யாளன்
பொறுக்கும் பொறையே பொறை. ௱௫௯

அடக்க மமரரு ளுய்க்கு மடங்காமை
யாரிரு ளுய்த்து விடும். ௱௬௰

காக்க பொருளா வடக்கத்தை யாக்க
மதனினூங் கில்லை யுயிர்க்கு. ௱௬௧

எல்லார்க்கு நன்றாம் பணித லவருள்ளுந்
செல்வர்க்கே செல்வந் தகைத்து. ௱௫௨

பொய்யுரையான் வையான் புறங்கூறான் யாவரையும்
மெய்யுரையான் உள்ளனவும் விட்டுரையான் - நெய்யுரையும்
கூந்தன் மயிலன்னாய்க் குழீ இவான் விண்ணோர்க்கு
வேந்தனா மிவ்வுலகம் விட்டு ௱௫௩

அடக்கமின்மை.

கற்றறிவு குலமேன்மை கருணைபெரும்
புகழ்செல்வங் கைம்மா றெண்ணா
துற்றதுவுங் கொடைசீர்மை யொழுக்கமருந்
தவநியம முறவின் கேண்மை
மற்றெதிரி லாத்திண்மை வாய்மைமிகுந்
தூய்மைகுண வனப்பி யாவும்
பெற்றிடினு மடக்கமில்லாப் பெருமிதத்தா
லித்தனைக்கும் பிழையுண் டாமால். ௱௫௪

காணாமல் வேணதெல்லாங் கத்தலாங் கற்றோர்முன்
கோணாமல் வாய்திறக்கக் கூடாதே - நாணாமல்
பேசுப்பேச் சென்னும் பெரும்பூனை வந்தக்கால்
கீச்சுக்கீச் சென்னுங் கிளி. ௱௫௫

கல்விச்செருக்கு.

முற்று முணர்ந்தவ ரில்லை முழுவதூஉம்
கற்றன மென்று களியற்க சிற்றுளியால்
கல்லுந் தகருந் தகரா கனங்குழாய்
கொல்லுலைக் கூடத்தி னால். ௱௫௬

பலகற்றோம் யாமென்று தற்புகழ வேண்டா
அவிர்க்கதிர் ஞாயிற்றைக் கைக்குடையுங் - காக்கும்
சிலகற்றார் கண்ணு முளவாம் பலகற்றார்க்
கச்சாணி யன்ன தோர் சொல். ௱௬௭

பருத்திவிதைத் தெடுத்துநூ லாக்கி யாடை
பண்ணியளித் தாலுடுத்தல் பார மாமோ
திருத்திமண்ணிற் செந்நெல்விதைத் தரிசி யாக்கித்
தீஞ்சோறட் டேட்டி லுண்ணச் செவ்வாய் நோமோ
அருத்தமோ டிலக்கணங்க ளிலக்கி யங்க
ளரியநூற் பலமுன்னோ ரளித்த தாலே
கருத்தேயந் நூல்கள்சில கற்று ணர்ந்து
கவிசொல்லல் வியப்பன்று கர்வ மென்னே. ௱௬௮

வான்குருவி யின்கூடு வல்லரக்குத் தொல்கரையான்
தேன்சிலம்பி யாவர்க்குஞ் செய்யரிதால்-யாம்பெரிதும்
வல்லோமே யென்று வலிமைசொல வேண்டாங்காண்
எல்லார்க்கு மொவ்வொன் றெளிது. ௱௬௯

உள்ளத்தூய்மை.

ஓடும் பொன்னு முறவும் பகையுமோர்
கேடுஞ் செல்வமுங் கீர்த்தியு நிந்தையும்
வீடுங் கானமும் வேறற நோக்குதல்
கூடுந்தன்மை கொளுமன நன்மனம். ௱௭௰

கொல்லாமை.

எவ்வுலகும் பராபரன்சந் நிதிய தாகு - மிலங்குமுயி ருடல
னைத்து மீசன் கோயில், எவ்வுயிரு மெம்முயிர்போ லென்று

நோக்கி - யிரங்காது கொன்றருந்து மிழிவி னோரை, வவ்வி
யெம தூதரருந் தண்டஞ் செய்து - வல்லிரும்பை யுருக்கியவ
ர் வாயில்வார்த்து, வெவ்வியதீ யெழுநரகில் வீழ்த்தி மாறு-
வேதனைசெய் திடுவரென வோது நாலே. ௱௭௪

கொலையிலா னுதவு மன்னங் கூறிற்பே ரமுத மாகும்
கொலையின னளிக்கு மன்னங் கூறில்வல் விடம தாகும்
கொலையின னளிக்கு மன்னங் கொடும்பவ மளிக்கு மூலம்
கொலைஞர்தம் மனையி லுண்பான் கொலைஞனே யாவனன்றே.

இத்திற னருள்கைப் பற்றி யுயிர்க்கெலா மிதத்தைச் செய்க
சத்திய மிரக்க மின்றேன் முத்தியைச் சார்கிலார்சற்
பத்தியா லியோகஞ் சாரும் யோகத்தாற் பரம ஞானம்
சித்தியா மிதற்கா தாரஞ் சீவகா ருணிய மன்றே, ௱௭௫

கங்கையிற் படிந்திட்டாலுங் கடவுளைப் பூசித் தாலும்
மங்குல்போற் கோடி தானம் வள்ளலாய் வழங்கி னாலும்
சங்கையில் லாதஞான சாஸ்திர முணர்ந்திட் டாலும்
பொங்குறும் புலால் புசிப்போன் போய்நர கடைவ னன்றே.

அம்மா வெனவலற வாருயிரைக் கொன்றருந்தி
இம்மா னிடரெல்லா மின்புற் றிருக்கின்றார்
அம்மா வெனுஞ்சத்தங் கேட்டகன்ற மாதவர்க்கும்
பொய்மா நிரையமெனிற் புசித்தவர்க்கென் சொல்லுவதே.

வேந்துமகற் றேர்க்கால் விடலஞ்சி மந்திரிதான்
சோர்ந்துதன தாவிவிட்டான் சோமேசா-வாய்ந்துணர்ந்தோர்
தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை. ௱௭௮

கூறுபோட்டவன் கொன்றவன் தின்றவன்
கூடநின்றவன் சொன்னவன் கேட்டவன்
ஆறுபேர்க்கு மருநர கேகதி
யாழிபோற்கிணை ருழமுண் டாக்கியே
சிறுபூச்சிசெய் யான்மர வட்டைகள்
தேளுநட்டுவக் காலிசெம் பாம்புகள்
விறுபூச்சிகள் வேணதெல் லாம்விழ
விழுவிழ்த்துவர் வேலர்தம் மாணையே. ௱௭௭

கொல்லா விரதங் குவலயமெல் லாமோங்க
வெல்லார்க்குஞ் சொல்லுவதென் னிச்சை பராமரமே. ()

தங்கண்மக்களுந் தாங்களும் படுந்துயர் தமக்கோர்
எங்கண் மக்களும் யாங்களு மென்செய்தோ மினிமேல்
எங்கண் மக்களும் யாங்களு மின்றுறு துயரைத்
தங்கண் மக்களுந் தாங்களும் படுவர்சத் தியமே. ௱௭௯

ஊழ்.

அலரவன் றீட்டி வைத்த வாயுளி னளவு காறும்
விலகிலா வினைக்குத் தக்க விருப்புணு வெறுப்பு ணுவும்
இலகவுண் டின்றே லின்று மின்னுயி ருடம்பின் வாழ்தல்
மலர்தலை யுலகத் தென்று வகுப்பர்நூ லுணர்ந்த வல்லோர்.

தேற்றமுற் பவத்திற் செய்த தீங்குநன் கெனுமிரண்டு
மாற்றல்சால் கரும மென்ப ரக்கரு மத்தை நோக்கிச்
சாற்றுமிப் பிறப்பிற் றக்க தரித்திரஞ் செல்வ நல்கிப்
போற்றுவ னுயிரை யெல்லாம் பொலிசுடர்த் திகிரி வள்ளல்

அவரவர் வினையி னவரவர் வருவா ரவரவர் வினையள வுக்கே, அவரவர் போக மென்றதே யாயி னுருக்கார்துணையதா குவர்கள், அவரவர் தேக முளபொழு துடனே யாதர வாரென நாடி, அவரவ ரடைத னெறிகன்மத் தடையு மாதர வாதர வாமே. ௱அ௨

துன்பம் வேட்டல சூழ்வது சூழுங்கா லதுபோ
லின்ப மென்பது முயன்றுழ லாதுவந் தெய்து
முன்பாரபரன் முடித்ததே முடியுமென் றெண்ணி
யன்ப ராய்த்தொழ முயல்வதே முயற்சியென் றறியார்.

ஆங்கால மெய்வருந்த வேண்டா மருங்கொம்பிற்
றேங்காய்க் கிளநீர்போற் சேருமே - போங்காலம்
காட்டானை யுண்ட கனியதுபோ லாகுமே
தேட்டாளன் றேடுந் தனம். ௱அ௪

பல்லாவு ளுய்த்து விடினுங் குழக்கன்று
வல்லதாந் தாய்நாடிக் கோடலைத் தொல்லைப்
பழைவினையு மன்ன தகைத்தேதற் செய்த
கிழவனை நாடிக்கொ ளற்கு ௱அ௫

பேதைப் படுக்கு மிழவூ ழறிவகற்று
மாகலூ ழுற்றக் கடை. ௱அ௬

மானம்.

கூனொடு வெதிரே பங்கு குருடுபே ருமை யானோர்
ஊனம தடைந்த புன்மை யாக்கையோ டழியு மம்மா
மானம தழிந்து தொல்லை வலியிழந் துலகில் வைகும்
ஈனயர் வசையின் மாற்ற மெழுமையு மகல்வதுண்டோ.

மானமுள் ளோர்க டன்னோர் மயிரறி னுயிர்வாழாத
கானுறு கவரி மான்போற் கமைபெறு புகழே பூண்பார்
மானமொன் றில்லார் தாமு மழுங்கலாய்ச் சழங்க லாகி
ஈனமாங் கழுதைக் கொப்பா யிருப்பரென் றுரைக்க லாமே.

என்பா யுகினு மியல்பிலார் பின்சென்று
தம்பா டுரைப்பரோ தம்முடையார் - தம்பா
டுரையாமை முன்னுணரு மொண்மை யுடையார்க்
குரையாரோ தாமுற்ற நோய். ௱அசு

மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்னா
ருயிர்நீப்பர் மானம் வரின். ௲கூ௯

அறிஞர்.

மாதர்க் கிதங்கவி வாணர்க்குச் சால வணக்கங்குரு
நாதர்க்கு நீதியோ டாசாரங் கல்வி நயந்தவர்க்குக்
கோதற்றவாசகம் பொய்க்குப்பொய் கோளுக்குக் கோளறிவி
லாதர்க்கிரட்டிப் பறிவுடை யோர்செய்யு மாண்மைகளே.

தன்மானங் குலமானந் தன்னைவந்தே யடைந்தவுயிர் தங்கண் மானம், என்மான மாகிலென்ன வெல்லவருஞ் சரியெனவே யெண்ணம் போந்து, நன்மானம் வைத்தெந்த நாளுமவர் தங்களுக்கு நன்மை செய்வோர், மன்மானி யடைந்தோரை காக்கின்ற வள்ளலென வழுத்தலாமே. ௱கூ௨

பொல்லார்க்குக் கல்விவரில் கொர்வமுண்டா மதனோடு பொருளுஞ் சேர்ந்தால், சொல்லாதுஞ் சொல்லவைக்குஞ் சொற்சென்றுற் குடிகெடுக்கத் துணிவர் கண்டாய்,நல்லோ

ர்க்கும் மூன்றுகுணமுண்டாகி லருளதிக ஞானமுண்டாம், எல்லோர்க்கு முபகார ராயிருந்து பரகதியை யெய்துவாரே.

முனிவினு நல்குவர் மூதறிஞ ருள்ளக்
கனிவினு நல்கார் கயவர் - நனிவிளைவிற்
காயினு மாகுங் கதலிதா னெட்டிபழுத்
தாயினு மாமோ வறை. ௱௬௪

மௌனம்.

ஆந்தைவீச் சிட்டதுவு மம்மறவன் கொன்றதுவுஞ் [ல்
சார்ந்திருந்தோ ரோடிப்போய்ச் சாற்றியதும் - வேந்தன்முத
பண்டுளசுற் றத்தார் பரிந்தோடி வந்ததுவும்
கண்டிருந்தும் பேசுவரோ காண். ௱௬௫

வேசையரிழிவு.

வெம்புவாள் விழுவாள் பொய்யே மேல்விழுந் தழுவாள் பொய்யே, தம்பலந் தின்பாள் பொய்யே சாகின்றே னென்பாள் பொய்யே, அம்பிலுங் கொடியகண்ணா ளாயிரஞ் சிந்தையாளை, நம்பின பேர்க ளெல்லா நாயினுங் கடையாவாரே. ௱௬௬

ஆல காலவி டத்தையு நம்பலா - மாற்றை யும்பெருங் காற்றையு நம்பலாம், கோல மாமத யானையை நம்பலாங் - கொல்லும் வேங்கைப் புலியையு நம்பலாம், காலனார்விடு தூதரை நம்பலாங் - கள்ளர் வேடர் மறவரை நம்பலாம், சேலை கட்டிய மாதரை நம்பினாற் - றெருவினின்று தியங்கித் தவிப்பரே.

அத்தியின் மலரும் வெள்ளை யாக்கைகொள்காக்கை தானும்
பித்தர்தம் மனமு நீரிற் பிறந்தமீன் பாதந் தானும்

அத்தன்மால் பிரம தேவ னாலள விடப்பட்டாலும்
சித்திரவிழியார் நெஞ்சந் தெரிந்தவ ரில்லை கண்டீர். ௱௯௫

படியி னப்பொழு தேவ னைத்திடு பச்சை நாவியை நம்பலாம் - பழிந மக்கென வழிம றிந்திடு பழைய நீலியை நம்பலாம், கொடும தக்குவ டெனவ ளர்ந்திடு குஞ்ச ரத்தையு நம்பலாம் - குலுங்கப் பேசிந கைத்திடுஞ்சிறு குமரர் தம்மையு நம்பலாம், கடையி லக்கமு மெழுதி விட்டக ணக்கர் தம்மையு நம்பலாங் - காக்கை போல்விழி பார்த்தி டுங்குடிக் காணி யாளரை நம்பலாம், நடைகு லுக்கியு முகமி னுக்கியு நகைந கைத்திடு மாதரை - நம்பொ ணாதுமெய் நம்பொணாது மெய் நம்பொ ணாதுமெய் காணுமே. ௱௯௬

அறங்கெடு நிதியுங் குன்று மாவியு மழியுங்காயம்
நிறங்கெடு மதியும் போகு நீண்டதோர் நரகிற் சேர்க்கும்
மறங்கெடு மறையோர்மன்னர் வணிகர்நல் லுழவோரென்று
குறங்கெடும் வேசை மாதர் குணங்களை விரும்பி னோர்க்கே.

பொருளொன்று நான்றந்த திவட்கதற்கில் லாமைபிணி பொய்பு ரட்டு, மருளொன்று கட்காமங் கொலைகளவு சூது வசை மரணத் தோடும், இருளொன்று நரகமின்னு மிவள்பா னுங் கொண்டதற்கோ ரிலக்க முண்டோ, தெருளொன்றும் பாரினம்போற் சமர்த்தாக்கொண் டெவர்வணிகஞ் செய்ய வல்லார். ௨௱௧

பசையறவெம் மாவியன்னாள் கைப்பொருளை லாம்பறிக்கப் பசியா னன்கு, திசைமுகமு நோக்கலாற் றிசைமுகனு

ஞேம்வாயிற் றீயா ளிட்ட, வசையான மண்ணுண்டு மாயனு
ஞேங்கையில் வாங்கு மோட்டால், இசைமேவு மீசனு ஞேம்
புவியி னமையொப்பா ரெவர்தா மம்மா. உ௱உ

ஆத்த மனையா ளகத்தி லிருக்கவே
காத்த மனையாளைக் காமுறுங் காளையர்
காய்ச்ச பலாவின் கனியுண்ண மாட்டாமல்
ஈச்சம் பழத்துக் கிடருற்ற வாறே. உ௱௩

அன்னையே யனைய தோழி யறந்தனை வளர்க்கு மாதே,
உன்னையோ ருண்மை கேட்பே னுரைதெரிந் துரைத்தல்
வேண்டும், என்னை புணரு வோர்க ளெனக்குமோ ரின்ப
நல்கிப், பொன்னையுங் கொடுத்துப் பாதப் போதினில்வீழ்வ
தேனோ. உ௱௪

பொம்மெனப் பணைத்து விம்மிப் போர்மதன் மயங்கி விழும்
கொம்மைசேர் முலையி னாளே கூறுவே னொன்று கேண்மோ
செம்மையி லறஞ்செய் யாதார் திரவியஞ் சிதற வேண்டி
நம்மையுங் கள்ளுஞ் சூதும் நான்முகன் படைத்தவாறே. ()

மாதரைப்பழித்தல்.

நாணி யென்பதை நாரியென் றுரைத்திடு நகையால்
வேணு வானது வளைந்துபோய்ப் புகுந்தது வென்றால்
காண லாவதோ ருருவமெய் நாரியைக் கண்டால்
பூணு வார்மயல் காளைய ரென்பது புதிதோ. உ௱௬

மாதரிழிவு.

கோளரி யடர்ந்த காட்டிற் குறங்கில்வைத் தமுதமூட்டித்
தோளினிற் றூக்கிவைத்துச் சுமந்துபேறுவ ளர்த்த

ஆளனைக் கிணற்றிற் றள்ளி யழகிலா முடவற் சேர்ந்தாள்
காளநேர் கண்ணினாரைக் கனவிலு நம்பொணாதே. ௨௱௭

சேய்கொண் டாருங்கமலச் செம்மலுட னேயரவப்
பாய்கொண்டா னும்பரவும் பட்டீச்சுரத்தானே
நோய்கொண்டா லுங்கொளலாம் நூறுவயதாமளவும்
பேய்கொண்டா லுங்கொளலாம் பெண்கொள்ள லாகாதே.

வாலி மடிந்ததுவும் வல்லரக்கர் பட்டதுவும்
கோலமுடி மன்னர் குறைந்ததுவும் - சால
மதியுடைய நூற்றுவர் மாண்டதுவு மையோ
சதிவிகரத் தால்வந்த தாழ்வு. ௨௱௯

உண்டதை யொழிக்கும் வாச லோரநீ ரொழித்து மேலே
வண்டலு மழுக்குஞ் சேறு முதிரமு மாறுவாசல்
உண்டத னிருப்பைக் கண்டு பெருங்களி யுள்ளங் கொ[illegible]
கண்டன ரீனரு ரெல்லாங் கதியெனக் கருது வா[illegible]ாய

புண்ணைக்கட்டிக்கொண் டேயதன் மே[illegible]
புடவைகட்டிப் புதுமைகள் காட்டி[illegible]
பெண்ணைக்கட்டிக்கொள் வாரிவர் [illegible]ரிவாய்ப்
பேயைக்கட்டிக்கொண் டாலும்[illegible]ழைப்பர்காண்
மண்ணைக்கட்டிக்கொண் டேய[illegible]றவிம்
மடையப்பிள்ளைகள் வாழ்[illegible] நோக்குங்கால்
கண்ணைக்கட்டிக்கொண் [illegible] போங்கிழக்
கழுதைவாழ்விற் கண்[illegible]ன லாகுமே. ௨௧௧

பிறப்புத் துன்புடையது.

அடுகரி தொடர வீழ வைந்தலை நாகங் காண
விடிகிணற் றறுகின் வேரைப் பற்றிநான் றிடவவ் வேரைக்
கடிகவோ ரெலியும் வந்து கறித்திட வதினின் றேனுக்
கிடைதுளி தேனக் கின்பம் போலுமிப் பிறவி யின்பம். ()

கொண்டு விண்படர் கருடன்வாய்க் கொடுவரி நாகம்
விண்ட நாகத்தின் வாயினில் வெருண்டவன் றேரை
மண்டு தேரைபின் வாய்தனி லகப்படு தும்பி
வண்டு தேனுக ரின்பமே மானிட ரின்பம். உகங

பெண்சன்மமே துன்பமெனல்.

அல்லலே பெண்ணெனப் பிறத்த லாங்கதின்
அல்லலே யிளமையிற் சிறத்த லாங்கதின்
அல்லலே கட்டழ குடைமை யாங்கதின்
அல்லலே யிரவலர் சார்பி னுகுதல். உகச

மானுடத்தினிழிவு.

அரும்பு கோணி லதுமணங் குன்றுமோ
கருப்பு கோணிடிற் கட்டியும் பாகுமாம்
இரும்பு கோணிடி லியானையை வெல்லலாம்
நரம்பு கோணிடி னுமதற் கென்செய்வோம். உகரு

யாக்கைநிலையாமை.

பந்தவுடல் வீண்பாடு பட்டவுடல் சிசிறுற்
கந்தவுட லொன்றுக்கா காதவுடல்-இந்தவுடல்
வைத்துப்பார்த் தென்ன வலிய வுயிர்மாய்த்துச்
செத்துப்போ னுலுநல்லதே. உகசு

கருவினின்று மழிந்தேபோங் கண்டகுழந்தை யினுங்குமரப்
பருவந்தனிலும்போம் யவனப் பருவந்தனிலு மழிந்தேபோ
முருவ நடுங்கு மூப்பதினு மொடுங்கு மெந்தக் காலேயினும்
ஒருவி யழித லியல்பாகு முலகத் துடலின் வாழ்க்கையுமே.

காமாதி யாலுங் கடுவெம் பசியாலுஞ்
சாமாறுந் துன்பமதைச் சாற்றகிலேன்-கோமானே
எண்சா ணுடம்பாலே பட்டதுய ரென்சொல்கேன்
புண்பாலில் வேனுழைந்தாற் போல். உகஅ

என்புகா லாக விருதோளும் வேயுளா
ஒன்பது வாயினு மூற்றருத்-துன்பக்
குரம்பை யுடையார் குடிபோக்கு நோக்கிக்
கவர்ந்துண்ணிப் போந்த கழுகு. உகசு

மலைமிசைத் தோன்று மதியம்போல்யானைத்
தலைமிசைக் கொண்ட குடையர் நிலமிசைத்
துஞ்சினு ரென்றெடுத்து தூற்றப்பட் டாரல்லா
லெஞ்சினு ரிவ்வுலகத் தில் உஉ0

நெருந லுளனொருவ னின்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு உஉக

இளமைநிலையாமை.

பாலனென பருவம்போம் பன்னுகுமாரப் பருவம்போம்
கோலமான தருணம்போங் கோலையூன்றிக் குனிந்தெழுந்து
காலன்மாய்க்க வனைவர்களுங் கல்லென்றழுது பேர்மாற்றி
எலப்பிணமென் றொருபெயரிட்டிடுகொட்டிடுதலொருதலையே.

இட்டமிகு மிளமைநல மீரையாண் டதனி - லிருபதினில் வளர்ச்சியுமுப் பதுவருடத் தழகு, முட்டகைய மேதையு நாற் பதுவருடத் துடலி - லொண்பலமு மைம்பதினி லறுப தினிற் றுதுங், திட்டியுமங் கெழுபதினி லெண்பதினிற் செ வியுங் - திகழ்மனமுந் தொண்ணூறிற் சீவனுநா றளவில், விட் டகலு மிரவியுதித் தொடுங்குவதென் றுணர்ந்தோர் - வீணுள்பட் டொழியாமல் விரும்புவர்நற் றவமே- உஉங

பணிபடு சோலைப் பயன்மர மெல்லாங்
கனியுதிர்ந்து வீழ்ந்தற் றிளைமை - நனிபெரிதும்
வேற்கண்ண ளென்றிவளை வெஃகன்மின் மற்றிவளுங்
கோற்கண்ண ளாகுங் குனிந்து. உஉச

புல்லர்.

நட்பிடைக் குய்யம் வைத்தார் பிறர்மனை நலத்தைச்செய்வார்
கட்புடைக் காமத் தீயாற் கன்னியை விலக்கி ஞேரும்
அட்டுட னஞ்சு கின்றோ ராயுளுங் கொண்டு நின்று
குட்டநோய் நரகில் வீழ்ந்து குளிப்பவ ரிவர்கள் கண்டாய்.

குரங்கு நின்றுகூத் தாடிய கோலத்தைக் கண்டே
அரங்கு முன்னிநாய் பாடிக்கொண்டாடிய வதுபோல்
கரங்க ணீட்டியே பேசிடுங் கசடரைக் கண்டு
சிரங்க ளாட்டியே மெச்சிடு மறிவிலார் செய்கை. உஉரு

தூம்பினிற் புதைத்த கல்லுந் துகளன்றிச் சுடர்கொடாது
பாம்புக்குப் பால்தான் வார்த்துப் பழகினு நன்மை தாரா
வேம்புக்குத் தேன்வார்த் தாலும் வேப்பிலைக் கசப்பு மாறு
தாம்பல நூல்கற் றாலுந் துற்சனர் நல்லோ ராகார். உஉஎ

புல்லரிவரெனல்

தன்னைத்தான் புகழ்வோருந் தன்குலமே பெரிதெனவே தான்சொல் வோரும், பொன்னைத்தான் றேடியறம் புரியாமற் புதைத்துவைத்துப் பொன்றினோரும், மின்னைப்போல் மனையாளை வீட்டில்வைத்து வேசிசுகம் விரும்புவோரும், அன்னைபிதா பாவலரைப் பகைப்போரு மறிவிலாக் கசடராமே.

மலைநல முள்ளுங் குறவன் பயந்த
விளைநில முள்ளு முழவன் சிறந்தொருவர்
செய்தநன் றுள்ளுவர் சான்றோர் கயந்தன்னை
வைதனை யுள்ளி விடும். ௨௨௯

சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோற்
கொல்லப் பயன்படுங் கீழ் ௨௩௰

புல்லர் குணம்,

குக்கலைப் பிடித்து நாவிக் கூண்டினி லடைத்து வைத்து
மிக்கதோர் மஞ்சட் பூசி மிகுமணஞ் செய்தாலுந்தான்
அக்குலம் வேற தாமோ வதன்மணம் புனுகுண்டாமோ
குக்கலே குக்க லல்லாற் குலந்தனிற் பெரிய தாமோ. ௨௩௧

வானர மழைதனி னனையத் தூக்கணான்
றானொரு நெறிசொலத் தாண்டிப் பிய்த்திடும்
ஞானமுங் கல்வியு நவின்ற நூல்களும்
ஈனருக் குரைத்திடி லிடர தாகுமே. ௨௩௨

தண்டா மரையி னுடன்பிறந்துந் தண்டே னுகரா மண்டூகம்
வண்டே கானத் திடையிருந்து வந்தே கமல மதுவுண்ணும்

பண்டே பழகி யிருந்தா லு மறியார் புல்லோர் நல்லோரைக்
கண்டே களித்தங் குறவாடித் தம்மிற் கலப்பார் கற்றோரே.

நாய்வாலை யளவெடுத்துப் பெருக்கித் தீட்டி னற்றமிழை யெழுதவெழுத் தாணியாமோ, பேய்வாழுஞ் சுடுகாட்டைப் பெருக்கித் தள்ளிப் பெரியவிளக் கேற்றிவைத்தால் வீடதாமோ, தாய்வார்த்தை கேளாத சகசண்டிக்கென் சாற்றிடினு முழுத்தகுணந் தவிரமாட்டான், ஈவாரை யீயவொட்டா னிவனு மீயா னெழுபிறப்பி னுங்கடையா மிவன்பி றப்பே.

கற்பூரப் பாத்திகட்டிக் கஸ்தூரி யெருப்போட்டுக் கமழ்நீர் பாய்ச்சிப், பொற்பூர வுள்ளியினை விதைத்தா லு மதின் குணத்தைப் பொருந்தக்காட்டுஞ், சொற்பேதை யர்க்கறிவிங் கினிதாக வருமெனவே சொல்லி னாலும், நற்போதம் வாராதாங் கவர்குணமே மேலாக நடக்குந்தானே. உஙரு

பொருட்பாலை விரும்புவர்கள் காமப்பாலிடை மூழ்கிப் புரள்வர் கீர்த்தி, யருட்பாலா மறப்பாலைக் கனவிலுமே விரும்பார்க ளறிவொன்றில்லார், குருப்பாலக் கடவுள்பால் வேதியர்பாற் புரவலர்பாற் கொடுக்கக்கோரார், செருப்பாலே யடிப்பவர்க்கு விருப்பாலே கோடி செம்பொன் சேவித் தீவார். உஙசு

கதிர்பெறு செந்நெல் வாடக் கார்குலங் கண்டு சென்று
கொதிதிரை கடலிற்பெய்யுங் கொள்கைபோற் குவலயத்தே
மதிதனம் படைத்த பேர்கள் வாடினோர் முகத்தைப்பாரார்
நிதிமிகப் படைத்தோர்க் கீவார் நிலையிலார்க் கீயமாட்டார். ()

கட்டி யடிப்பவர்க்குங் கன்மீதி லேற்றுவர்க்கும்
எட்டி யடிப்பவர்க்கு மீவரே - திட்டமுடன்
பாடுவோர்க்கீயாரே பல்லுதிரத் தாடையின்மேற்
போடுவோர்க் கீவார் பொருள். ௨௩௮

துர்ச்சனன் றனக்குத் தானுந் துரைத்தனங் கொடுத்தா லென்றுஞ், சற்பனை துரோகங் கேடு தானினைத்திடுவா னென்போன், மற்கடந் தானு மாகி வாலிலே தேளுங் கொட்டி, உற்றிடங் கொள்ளி யீந்தா லூரெலாஞ் சுடும்போ லன்றே. ()

கொன்றி லாரைக் கொலச்சொலிக் கூறினோர்
தின்றி லாரைத் தினச்சொலித் தெண்டித்தோர்
பன்றி யாய்ப்படி யிற்பிறந் தேழ்நரக
கொன்று வாரர னாணையி துண்மையே. ௨௪௰

துட்டர்.

நன்மனப் பார்ப்பார் தங்களைப் படைத்துக் காகத்தை யென்செயப் படைத்தாய், துன்மதி வணிகர் தங்களைப் படைத்துச் சோரரை யென்செயப் படைத்தாய், வன்மன வடுகர் தங்களைப் படைத்து வானரமென்செயப் படைத்தாய், நன்மனை தோறும் பெண்களைப் படைத்து நமனையென் செயப் படைத்தனையே. ௨௪௧

புலியொடு புல்வாய் தானும் பொருந்தியே யுறவானாலும்
எலியொடு பூனை கூடி விசைந்துநன் குறவா னாலும்
நலமிகு சர்ப்பந் தேரை நன்றதா யுறவா னாலும்
மலமின்மே லவரோ டற்ப மதியின ருறவா காரே. ௨௪௨

ஆலைப் பலாவாக்க லாமோ வருஞ்சுணங்கன்
வாலை நிமிர்க்க வசமாமோ - நீலநிறக்
காக்கைதனைப் பேசுவிக்க லாமோ கருணையிலா
மூர்க்கனைச்சீ ராக்கலா மோ. உசங

புல்லருக்குச் செய்த நன்றி.

தேளது தீயில் வீழ்ந்தாற் செத்திடா தெடுத்த பேரை
மீளவே கொடுக்கி னாலே மெய்யுறக் கொட்டலே போல்
எளனம் பேசத் தீங்குற் றிருப்பதை யெதிர்கண் டாலுங்
கோளினர் தமக்கு நன்மை செய்வது குற்ற மாமே. உசச

வல்லியந் தனைக்கண் டஞ்சி மரந்தனி லேறும் வேடன், கொல்லிய பசியைத் தீர்த்தே யிரட்சித்த குரங்கைக் கொன் ருன்,நல்லவன் றனக்குச் செய்த நலமது மிக்க தாகும், புல் லர்க டமக்குச் செய்தா லுயிர்தனைப் போக்குவாரே. உசரு

புல்லருக்குச்செய்த நன்றி.

வேங்கை வரிப்புலிக்குத் தீர்த்த விடதாரி
யாங்கதனுக் காகார மானாற்போற் - பாங்கறியாப்
புல்லறி வாளர்க்குச் செய்த வுபகாரம்
கல்லின்மே லிட்ட கலம். உசசு

பொருள் பயனற்றதென்பது.

கோடிபொன் னளிப்ப னின்றே கோடிரோர் மாத்திரைக் குள்,ஊடிய கிளைக்கோர் வார்த்தை யுரைத்தடை குவனென் றாலும், தேடிய காலதூதர் சிமிழ்த்தல்விட் டொழிவ ரோ கொல், வாடிய மருங்கு னங்காய் மாண்பொருட் பயன் கண் டாயோ. உசஎ

வளநிதி படைத்தோ மென்றும் வடிவினி லுடைபோமென்றும், அளவில்சே யின்றோ மென்று மனுபவத் தமைந்தோ மென்றும், இளமையிற் சிறந்தோமென்று மெழினலமுடையோ மென்றும், உளமகிழ் கூர்வர்சற்று முண்மைநா லுணர்ச்சி யில்லார். ௨௪௮

ஈயாமை.

நம்ப னடியவர்க்கு நல்காத் திரவியங்கள்
பம்புக்காம் பேய்க்காம் பரத்தையர்க்காம் - வம்புக்காம்
கொள்ளைக்காங் கள்ளுக்காங் கோவுக்காஞ் சாவுக்காம்
கள்ளர்க்காந் தீக்காகுங் காண். ௨௪௯

கொடுத்தலுந் துய்த்தலுந் தேற்றா விடுக்குடை
யுள்ளத்தான் பெற்ற பெருஞ்செல்வ-மில்லைத்
தூருவுடைக் கன்னியரைப் போலப் பருவத்தா
தேதிலான் றுய்க்கப் படும். ௨௫௰

பொருட்பெருமை.

சிவிகைமுன் னூர்தி வேண்டுஞ் செழும்பொருட் செலவு வேண்டும், குவிகையே வலரும் வேண்டுங் கோலமார்ந் திருக்க வேண்டும், கவிகைதாங் குநரும் வேண்டுங் கையுறை சிறப்ப வேண்டும், அவிகையில் விளக்கம் வேண்டு மரசவை குறுகு வோர்க்கே. ௨௫௧

கோதறு கல்வி சாலூர்க் குடியிருந் தறியா னேனும்
ஓதருஞ் செல்வ மிக்கோ னொருவனே சிறந்தோ னவ்வான்
காதலின் வேத முன்னுங் கலைகள்கற் றுணர்ந்தா னேனும்
தீதமை மிடிய னாயிற் சிறந்திடான் வேத்தவைக்கே. ௨௫௨

பொருணணி யுளனென் றியாரும் புகலுமோர் வார்த்தை வேண்டும், இருகையுங் கடகம் வேண்டு மிலங்குகுண் டலங்கள் வேண்டும், வருவிர லாழி வேண்டு மார்பிடை மதாணி வேண்டும், உருவமுத் தாரம் வேண்டு முயர்ந்தபட் டாடை வேண்டும். ௨௫௩

பொருளிலார்க் கின்பமில்லை புண்ணிய மில்லை யென்றும்
மருவிய கீர்த்தி யில்லை மைந்தரிற் பெருமை யில்லை
கருதிய கரும மில்லை கதிபெற வழியு மில்லை
பெருநிலந் தனிற்சஞ் சாரப் பிரேதமாய்த் திரிகு வாரே. ()

நற்பொரு ளறத்தை யின்ப நலத்தைஞா னத்தைமிக்க
பற்பல ருறவை நட்பைப் பகைதவிர்த் திடுந் திறத்தை
சொற்பெரும்புகழையென்றுந்துகளிலாப்பெருமைதன்னைப்
பொற்புறுங் கதியை யெல்லாம் பொருளலாற் றருவதின்றே.

ஆலிலை பூவுங் காயு மளிதரு பழமு முண்டேல்
சாலவே பட்சி யெல்லாந் தன்குடி யென்றே வாழும்
வாலிபர் வந்து தேடி வந்திப்பார் கோடி கோடி
ஆலிலை யாதி போனு லங்குவந் திருப்பா ருண்டோ. ௨௫௬

ஏரிநீர் நிறைந்த போதங் கிருந்தன பட்சி யெல்லாம்
மாரிநீர் மறுத்த போதப் பறவையங் கிருப்ப துண்டோ
பாரினை யாளும் வேந்தன் பட்சமு மறந்த போது
ஆருமே நிலையில் லாம லவரவ ரேகு வாரே. ௨௫௭

குணமிருந் தாலுங் குலமிருந் தாலுங் கொழுந்தமிழின்
மணமிருந் தாலு மதியிருந் தாலும் வழுத்தியவங்

கணமிருந் தாலுமோர் காசும்பெ ருதுகிங் காரவரைப்
பணமிருந் தாலவர்க் கெல்லாரு மஞ்சலி பண்ணுவரே. உருஅ

பொன்னொடு மணியுண் டானாற் புலையனுங் கிளைஞரென்று
தன்னையும் புகழ்ந்து கொண்டு சாதியின் மணமுஞ் செய்வர்
மன்னரா யிருந்த பேர்கள் வகைகெட்டுப் போவ ராயின்
பின்னையு மாரோ வென்று பேசுவா ரேசு வாரே. உருகூ

செல்வநிலையாமை.

என்பொருளென் பொருளென்று சீவன்விடு மனமேயொ
ன் றியம்பக் கேளாய், உன்பொருளா னலதன்மே லுன்னும
ம் வரைந்துளதோ வுன்ற னேடும், முன்பிறந்து வளர்ந்தது
கொ லினியுனைவிட் டகலாதோ முதிர்ந்து நீதான், பின்பிறக்
கும் போததுவுங் கூடவிறந் திடுங்கொல்லோ பேசு வாயே. ()

வாழ்வது வந்த போது மனந்தனின் மகிழ வேண்டாம்
தாழ்வது வந்த தானாற் றளர்வரோ தக்கோர் மிக்க
ஊழ்வினை வந்த தானு லொருவரால் விலக்கப் போமோ
ஏழையா யிருந்தோர் பல்லக் கேறுதல் கண்டி லீரோ. உசுக

நடலை வாழ்வுகொண் டென்செய்தீர் நாணிலீர்
சுடலை சேர்வது சொற்பிர மாணமே
கடலி னஞ்சமு துண்டவர் கைவிட்டால்
உடலி னூர்கிடந் தூர்முனி பண்டமே. உசுஉ

துகடீர் பெருஞ்செல்வந் தோன்றியக்காற் றொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லரோ - டுண்க
வகடுற யார்மாட்டு நில்லாது செல்வஞ்
சகடக்கால் போல வரும். உசுரு

அக்கையு மாயிரத்தெட் டண்டங் களுநிலையாத்
தாக்கியழிந் தான்சூரன் சோமேசா - நோக்கியிடில்
நில்லாத வற்றை நிலையின வென்றுணரும்
புல்லறி வாண்மை கடை. ௨௬௪

கூடாவொழுக்கம்.

சொல்லுவார்வார்த்தை கேட்டுத் தோழமையிகழ்வார்புல்லர்
நல்லவர் விசாரி யாமற் செய்வரோ நரிசொற் கேட்டு
வல்லியும் பசுவுங் கூடி மாண்டதோர் கதையைப் போல
புல்லிய ரொருவராலே போகுமே யற்பர் நேசம். ௨௬௫

தொழுதகை யுள்ளும் படையொடுங்கு மொன்னா
ரழுதகண் ணீரு மனைத்து. ௨௬௬

ஆன்படு நெய்பெய் கலனு ளது களைந்து
வேம்படு நெய்பெய் தனைத்தரோ - தேம்படு
நல்வரை நாட நயமுணர்வார் நண்பொரீஇப்
புல்லறிவி னாரொடு நட்பு. ௨௬௭

தக்காரோ டொன்றித் தமரா யொழுகினார்
மிக்காரா லென்று சிறியாரைத் தாந்தேறார்
கொக்கார் வளவய லூரதின லாமோ
அக்காரஞ் சேர்ந்த மணல். ௨௬௮

ஓரஞ்சொல்லல்.

உள்ள வழக்கிருக்க வூரார் பொதுவிருக்கத்
தள்ளி வழக்கதனைத் தான்பேசி - எள்ளளவுங்
கைக்கூலி தான்வாங்குங் காலறுவான் றன்கிளையும்
எச்சமறு மென்றூ லறு. ௨௬௯

வழக்குடையா னிற்ப வலியானைக் கூடி
வழக்கை யழிவழக்குச் செய்தோன் - வழக்கிழந்தோன்
சுற்றமுந் தானுந் தொடர்ந்தழுத கண்ணீரால்
எச்சமறு மென்று லறு. ✓ உஎய

கல்வி யுடையீர் கருங்கான கத்திடையே
நெல்லி யிலையுதிர்ந்து நிற்பதெவன் - வல்லாய்கேள்
வெல்லா வழக்கை விலைவாங்கி வெல்விக்கும்
வல்லாளன் சுற்றம்போ னாண்டு. உஎக

ஆரம் பூண்ட மணிமார்பா வயோத்திக் கரசே யண்ணகேள்
ஈர மிருக்க மரமிருக்க விலைக ளுதிர்ந்த வாறேது
வாரங் கொண்டு வழக்குரைத்து மண்மே னின்று வலிபேசி
ஓரஞ் சொன்னார் குடியதுபோ லுதிர்ந்துகிடக்குந்தம்பியரே.

நாரிகள் வழக்க தாயி னடுவறிந் துரைத்தார் சுத்தர்
ஏரிபோற்பெருகி மண்மே லிருகண்ணும் விளங்கி வாழ்வார்
ஓரமே சொல்வா ராகி லோங்கிய கிளையு மாண்டு
தீரவே கண்ணி ரண்டுந் தெரியாமற் போவர் தாமே. உஎங

பகைத்திறம் பேணல்.

மன்னவன் கணக்கன் பார்ப்பான் வலியுள்ளோன்மந்த்ரவாதி
பொன்னுள வன்கு ருக்கள் புலவன்பண் டிதன மைச்சன்
அன்னஞ்செய் திடுவோ னென்று மடங்காத துட்ட ராமிப்
பன்னிரு பேரோ டென்றும் பகைகன விலுங்கூடாதே. ()

நந்தி கலம்பகத்தான் மாண்டகதை நாடறியும்
சுந்தரஞ்சேர் தென்குளத்தூர்ச் சோமேசா-சந்ததமும்

வில்லே ருழவர் பகைகொளினுங் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை. ௨௭௫

முயற்சியுடைமை.

கடவுளீ குவனென் றெண்ணிநித் தியமுங் கருதுறு முயற்சிசெய் யானேல், அடலுறு செல்வ மடைகுவ னே கொ லருங்கலத் திட்டபா லடிசில், மிடலுறு கரத்தா லெடுத் துண் டெங்ஙன் வீங்கும்வெம் பசிப்பிணி யொழிப்பன், உடல்பவந் தனக்கோ ராகர மாகு முடனனி வாட்டுமெய்த் தவத்தோய். ௨௭௬

மானிட னொருவன் றனக்கருஞ் செல்வம் வாய்க்கவென் றனுதின முயற்சி, தானுஞற் றுவனேற் கடவுளு மதனைத் தந்தளிக் குவனதா லன்றே, ஆனபே ரறிஞர் திருவினை முயற்சி யாக்குமம் முயற்சியல்லாமே, ஈனமா ரின்மை புகுத்திடு மாலென் றியாருநன் குணர்தர நவில்வார். ௨௭௭

தாளாண்மை யில்லாதான் வேளாண்மை பேடிகை
வாளாண்மை போலக் கெடும். ௨௭௮

முயற்சி திருவினை யாக்கு முயற்றின்மை
யின்மை புகுத்தி விடும். ௨௭௯

தெய்வத்தா னாகா தெனினு முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும். ௨௮௰

திங்கரும் பீன்ற திரள்கா லுளையலரி
தேங்கமழ் நாற்ற மிழந்தாஅங்-கோங்கு
முயர்குடியுட் பிறப்பி னென்னும் பெயர்பொறிக்கும்
பேராண்மை யில்லாக் கடை. ௨௮௧

சுற்றந்தழுவல்.

பற்றும் வெறுக்கை யொழிந்துழியும் பழைமை யெடுத்துப் பாராட்டும், சுற்ற மதனைப் பெருங்கொடையாற் றாய மொழியாற் றழுவலுறின், அற்ற மவனுக் கொருகாலு மணுகாதாக்க மிகப்பெருகும், முற்ற நினைக்கும் பகைவர் தொழின் முற்றுதென்றே யறிந்திடுக. ௨௮௨

அழுன்மண்டு போழ்தி னடைந்தவர்கட் கெல்லா
நிழன்மரம்போ னேரொப்பத் தாங்கி - பழுமரம்போற்
பல்லார் பயன்றுய்ப்பத் தான்வருந்தி வாழ்வதே
நல்லாண் மகற்குக் கடன். ௨௮௩

காக்கை கரவா கரைந்துண்ணு மாக்கமு
மன்னநீ ரார்க்கே யுள. ௨௮௪

ஆர்வி டணனோ டளவளா வாதரக்கன்
சோர்விலா வாழ்விழந்தான் சோமேசா - நேரே
அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடின்றி நீர்நிறைந் தற்று. ௨௮௫

நீதி லரிட்டங்கள் செய்யவுண வைக்கொள்ள
மேதினியிற் றம்மினத்தை மேவுதலா - னீதிநெறி
போற்றுபுகழ் புன்னைவன பூபாலா வுற்றுரை
மாற்றிருமெய் நப்போல் வளே. ௨௮௬

வலி, காலம், இடம், இவற்றின் பொது.

வலியே கால மிடமிவற்றுன் மாற்றுன் றனக்கு முனக்கு முள, பலவா நிலையு மவற்குரிய பண்பு மதற்கா மிடையூறும், விலகா ததனை விலக்குவதும் வெல்லு மாறும் வென்றத

னால், உலவாப் பயனு மிவையனைத்து மோர்ந்து தெளிந்தே வினை செய்க. ௨௮௭

யானையைச் சலந்தனி லிழுத்த வக்கரா
பூனையைக் கரைதனிற் பிடிக்கப் போகுமோ
தானையுந் தலைவருந் தலம்விட் டேகினால்
சேனையுஞ் செல்வமுந் தியங்கு வார்களே. ௨௮௮

நிலைதளர்ந் திட்ட போது நீணிலத் துறவு மில்லை
சலமிருந் தகன்றபோது தாமரைக் கருக்கன் கூற்றாம்
பலவன மெரியும் போது பற்றுதீக் குறவாங் காற்று
மெலிவது விளக்கே யாகின் மீண்டுமக் காற்றே கூற்றாம். ()

சங்குவெண் டாம ரைக்குத் தந்தைதா யிரவி தண்ணீர்
அங்கதைக் கொய்து விட்டா லழுகச்செய் தந்நீர் கொல்லும்
துங்கவெண் கரையிற்போட்டாற் சூரியன்காய்ந்துகொல்வான்
தங்களி னிலைமை கெட்டா லிப்படித் தயங்குவாரே. ௨௯௦

காலமறிதல்.

மிக்கவலி யோரெனினு மேலவரை வெல்வோர்
தக்கபரு வந்தனைச் சார்வுறவ றிந்தே
அக்கரும முற்றும்வகை யாய்ந்தழிவு றாதே
தொக்கபடை கொண்டமர் தொலைத்திடுவ ரன்றே. ௨௯௧

வலிமையறிதல்.

வலியவர் தம்மையும் வரம்பின் மிக்குறின்
மெலியவ ராயினும் வென்று போவரால்
உலகினில் வழக்கமீ துணர்ந்து வாழுவன்
கலைபயில் கற்புடைக் காவன் மன்னனே. ௨௯௨

தெரிந்துசெயல்.

எஞ்சுறை படைகள் கற்று நவையுறு தொன்ன லாரை
வஞ்சினத் தெறியும் வீரர் வள்நக ரதனை மற்றோர்
இஞ்சியைச் சூழ்ந்து போருக் கெய்தினு மெண்ணி யன்றி
வெஞ்சினத் தினைமேற்கொண்டு விரைந்தமரியற்றல்செல்லார்.

குலத்தினை வினவி யுள்ளக் கோளினை வினவி வந்த
நிலத்தினை வினவித்தொல்லோர் நெறியினை வினவிக்கொண்ட
சலத்தினை வினவிப் போர்செய் தானையை வினவி யன்னோர்
வலத்தினைவினவியல்லான் மற்றொன்றுமனங்கொள்வாரோ.

அமைச்சு.

ஐயறிவுந் தம்மை யடைய வொழுகுதல்
எய்துவ தெய்தாமை முற்காத்தல் - வைகலு
மாறேற்கு மன்னர் நிலையறித லிம்மூன்றுஞ்
சீரேற்ற பேரமைச்சர் கோள். உகூரு

மன்னவர் செவியழன் மடுத்த தாமென
நன்னெறி தருவதோர் நடுவு நீதியைச்
சொன்ன ரமைச்சர்க டுணைவர் மேலையோ
ரொன்னலர் விழைந்தவா றுரைக்கின் றார்களே. ()

நனிபயன் பயப்பச் சிறுமுயற் சியினு னலத்தகு வினை யுமற் றனைய, வினையினைத் தொடங்குங் காலது தனக்கு வேண்டிய பொருள்களும் படையு; மினிதுறு பொழுது முபாய முஞ் செயலு மிடைப்படு மூறுக ணீக்கித், துனிவறமுடிவு போக்கிடு மாறுஞ் சூழ்தர வல்லவ னமைச்சன். உகூள

குடிகளியல்பு.

கொடும்பிறை வடிவிற் செய்த கூனிரும் பங்கை வாங்கி
முடங்குகால் வரிவண் டார்ப்ப முள்ளரைக் கமல நீலம்
அடங்கவெண் சாலி செந்நெல் வேறுவே றரிந்தீ டாக்கி [வார்.
நெடுங்களத் தம்பொற்குன்ற நிரையெனப்பெரும்போர்செய்

கற்றவை களைந்து தூற்றிக் கூப்பியூர்க் காணித்தெய்வம்
அற்றவர்க் கற்ற வாறீந் தளவைகண் டாறிலொன் று [ன்னு,
கொற்றவர் கடமை கொள்ளப் பண்டியிற் கொடுபோய்த் தெ
டுற்றவர் சுற்றந் தெய்வம் விருந்தினர்க் கூட்டி யுண்பார்.

அல்லாரு மழையெவர்க்கு மழுதெனினுங் காலமுணர்ந்
தெல்லாரு நலம்பெறச்செய் திடுங்கொல்லோ வொருநிருபன்
பல்லாரு மகிழ்வுறவே பண்ணலசாத் தியமெனலால்
நல்லாரன் னேன்செயலை நலமெனக்கொண் டொழுகுவரால்.

அரசு.

மானிலங்கா வலனவான் மன்னுயிர் காக்குங்காலைத்
தானதனுக் கிடையூறு தன்னாற்றன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தாற் கள்வரா லுயிர்தம்மால்
ஆனபய மைந்துந்தீர்த் தறங்காப்பா னல்லனே. ௱௧

பரிசனம் பகைவர் கள்வர் படர்தரு முயிர்க டானென்
றுரைசெயைந் திடத்தினு முலகிடை யிடையூறெய்தா
வரிசையிற் காத்து நீதி வழுக்கினர் தம்மை மொத்திக்
கரிசறப் பொருளுங் கோடல் காவலர் தரும மைந்தா. ௱௨

வினைவினஞ் சாமைநிற்றல் வினைஞருக் களித்தல் செய்யும்
வினையிடை மனமேற் சேறல் விளங்கிய வறிவு வல்லே

வினையினை முடித்த லாண்மை வெங்கொலை யாதி நீக்கல்
வினைவளர் மான முற்றும் வேந்தருக் கியல்ப தாமே. உ௱௩

மழைவளஞ் சுரக்கு மாறும் வயனிலம் விளையு மாறும்
விழையறம் வளரு மாறும் வேதநூல் விளங்கு மாறும்
தழைபொரு ளீட்டு மாறுஞ் சமரிடை வெல்லு மாறும்
பிழைதப வாழு மாறும் பிறழ்தரக் கோலினுகும். ௩௱௪

பத்திமை சான்ற படையும் பலர்தொகினு
மெத்துணையு மஞ்சா வெயிலரணும்-வைத்தமைந்த
வெண்ணி னுலவா விழுநிதியு மிம்மூன்று
மண்ணுளும் வேந்தர்க் குறுப்பு. ௩௱௫

எந்தவேளையினு நொந்தவர் துயர்கேட் டிடரிழைப் பவன்றன தேக, மைந்தனே யெனினும் வதைத்திட வொல்கான் மாக்களின் சுகநலமின்றி, சிந்தனை மற்றோர் பொருளினிற் செலுத்தான் றீமொழி கனவிலும் புகலான், றந்தைபோற் றுய்போ லெவரையுங் காக்குந் தன்மையனே யிறையன்றோ. ௩௱௬

வானோக்கி வாழு முலகெல்லா மன்னவன்
கோனோக்கி வாழுங்குடி. ௩௱௭

கொடுங்கோன்மை.

வேலியானது பயிர்தனை மேய்ந்திட விதித்தாற்
காலனானவ னுயிர்தனைக் கவர்ந்திட நினைத்தால்
ஆலமன்னையர் பாலகர்க் கருத்து வரானல்
மேலி தோர்ந்துபின் யார்கொலோ விலக்குவர் வேந்தே. ()

அல்லலை யுடையவ ரழுத கண்ணினீர்
செல்வமன் னவர்கெடத் தேய்க்கும் வாளெனச்
சொல்லிய மொழிசெவித் தொளைக்கு ளேபுக
வில்லையோ வுடற்பய னிழந்த மன்னனே. ௩௱௯

கொடியமன் னவர்க்குக்குடிகளே யொன்னார் கோட்டையே யமர்க்கள மவர்தம், அடிகடோய் நிலமெங்க ணும் படு குழியா மயின்றிடு மன்னமும் விடமாம், நெடியவா சனமே காசன மேடை நிமிருழை யோர்கமன் றாதர் கடிமனை மயானக் காடெனிற் கொடுங்கோற்-கரரணருய்யுமாறெவனோ.

கல்லா வரசனுங் காலனுநே ரொக்குங்
கல்லா வரசனிற் காலன்மிக நல்லன்
கல்லா வரச னறமோரான் கொல்லென்பான்
நல்லாரைக் கால னணுகிநில் லானே. ௩௧௧

சீடனிலக்கணம்.

மாரியை நோக்கும் வனப்புட் போலும்
பாரியை நோக்கும் பாவலர் போலும்
கொழுநனை நோக்குங் குலமகள் போலுல்
தேசியை நோக்குஞ் சீடன் றெரிவே. ௩௧௨

போலிக்குரு.

வேதவா கமசாத் திரபுரா ணங்கள் விளங்கவே கற்றுணர்ந்த வற்றைத், தீதறவெவர்க்குந் தெளிவுற வோதிச் செப்பிய வந்நெறியதனிற், சாதக மிலாத குருவினை யொருவன் றனடைந் தானந்தம் வினவல், ஏதமாங் கழுதை யினைக்குங் குமத்தினியல்புகேட் டிடுதல்போலன்றே. ௩௧௩

காதிலேகுண்டலங்கள் கையிலேசெபமாலை கழுத்தின்
மார்பின், மீதிலே தாழ்வடங்கள் மனதிலே கரவடமாய்
வேடம் பூண்டோர், வாதிலேயயன்றேடுந் தண்டலைநீ ணெறி
யாரே மனிதர்காணும், போதிலே மௌனியிராப் போதிலே
ருத்ராட்சப் பூனைதானே. ௱௧௬

குருத்துரோகம்.

பத்தினி பத்தர்கள் தத்துவ ஞானிகள்
சித்தங் கலங்கச் சிதைவுகள் செய்தவர்
அத்தமு மாவியு மாண்டொன் றின் மாய்ந்திடும்
சத்திய மீது சதாநந்தி தானே. ௱௰௬

ஓரெழுத் தொருபொரு ளுணரக் கூறிய
சீரெழுத் தாளரைச் சிதையச் செப்பினோர்
ஊரிடைச் சுணங்கனாய்ப் பிறந்தங்கோருகம்
பாரிடைக்கிருமியாய்ப் படிவர்மண்ணிலே. ௱௰௭

பூசாவிசேடம்.

பூசையில் லாதா னுண்டி புழுப்பிணம் புலையன் கட்டம்
மாசுள பாவ மொக்கும் வாளினிற் றீயில் வீழ்ந்து
நாசமா வதுவே நன்று நற்குலம் பிறந்தா னேனும்
தேசுளா ரவனைத் தீண்டிற் றெரிசிக்கில் நினைக்கிற் பாவம்.

பூசைக்காகாமலர்கள்.

யாது மீசனுக் கிடுமல ராயினு மிழிந்த
போது வீழ்ந்தது மயிர்செறிந் ததுவண்டு பொரும்பூர்
தாது நாறிடா ததுவிரி யாதது சைவத்
தோது தூய்மையில் லாததென் றேழையு மொழிப்பார். ()

மாயை.

மாயையே யுடல மாகு மாயையே கரண மாகும்
மாயையே புவன மாகு மாயையே போக மாகும்
மாயையே பொறிக ளாகு மாயையே புலன்க ளாகும்
மாயையே யண்ட பிண்டம் யாவையு மாயை யாமே. ௯௧௧

அழகு.

கண்வனப்புக் கண்ணோட்டங் கால்வனப்புச் செல்லாமை
எண்வனப் பித்துணையா மென்றுரைத்தல்-பண்வனப்புக்
கேட்டார்நன் றென்றல் கிளர்வேந்தன் றன்னாடு
வாட்டானன் றென்றல் வனப்பு. ௨௨௰

அரியது.

அரியது கேட்கின் வரிவடி வேலோய்
அரிதரிது மானுட ராத லரிது
மானுட ராயினுங் கூன்குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்த லரிது
பேடு நீங்கிப் பிறந்த காலையும்
ஞானமுங் கல்வியு நயத்த லரிது
ஞானமுங் கல்வியு நயந்த காலையும்
தானமுந் தவமுந் தான்செய லரிது
தானமுந் தவமுந் தான்செய்வ ராயின்
வானவர் நாடு வழிதிறந் திடுமே. ௯௨௩

மக்க ளாக்கையிற் பிறத்தலே யரிதுமற் றதிலும்
தூக்க கூன்குரு டூமையைத் துறத்தலு மரிது

நற்கு லத்திடை வருதலு மரிதுஞா னத்தான்
முக்க ணீசனுக் காட்படல் முற்றிலு மரிதே. ௱உஉ

எப்பிறப் பாயினு மேமாப் பொருவதற்கு
மக்கட் பிறப்பிற் பிறிதில்லை - யப்பிறப்பிற்
கற்றலுங் கற்றவை கேட்டலுங் கேட்டதன்க
ணிற்றலுங் கூடப் பெறின். ௱உ௩

அருந்தொழி லாற்றும் பகடுந் திருத்திய
மெய்ந்நிறைந்து நீடிருந்த கன்னியும் - நொந்து
நெறிமாறி வந்த விருந்துமிம் மூவர்
பெறுமா றரிய பொருள். ௱உ௪

எல்லார்க்கு நல்லவ னிங்கில்லை யங்கில்லை யெங்குமில்லை
எல்லார்க்கு நல்லவன் சந்திர னாயினு மேந்திழையார்
எல்லார்க்கு நல்லவ னாயே யிருந்தில னென்றிகழ்வார்
எல்லார்க்கு நல்லவ னீயே புகழ்க்கச்சி யேகம்பனே. ௱உ௫

எழுதரிது முன்ன மெழுதியபின் னத்தைப்
பழுதறவா சிப்பரிது பண்பா - முழுதுமதைக்
கற்பரிது நற்பயனைக் காண்பரிது கண்டக்கால்
நிற்பரிது தானன் னிலை. ௱உ௬

பெரியது.

பெரியது கேட்கி னெரிதவழ் வேலோய்
பெரிது பெரிது புவனம் பெரிது
புவன மோநான் முகன் படைப்பு
நான்முகன் கரியமா லுந்தியில் வந்தோன்

கரிய மாலோ வலைகடற் றுயின்றோன்
அலைகடல் குறுமுனி யங்கையி லடக்கம்
குறுமுனி யோகல சத்திற் பிறந்தோன்
கலச மோபுவி யிற்சிறு மண்
புவியோ வரவினுக் கொருதலைப் பாரம்
அரவோ வுமையவள் சிறுவிரன் மோதிரம்
உமையோ விறைவர் பாகத்தொடுக்கம்
இறைவரோ தொண்ட ருள்ளத் தொடுக்கம்
தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே. ௬உஎ

இனியது.

இனியது கேட்கிற் றனிநெடு வேலோய்
இனிது இனிது ஏகாந்த மினிது
அதனினு மினிது ஆதியைத் தொழுதல்
அதனினு மினிது அறிவினர்ச் சேர்தல்
அதனினு மினிது அறிவுள் ளோரைக்
கனவிலு நனவிலுங் காண்பது தானே. ௬உஅ

கொடியது.

கொடியது கேட்கி னெடியவெவ் வேலோய்
கொடிது கொடிது வறுமை கொடிது
அதனினுங் கொடிது இளமையில் வறுமை
அதனினுங் கொடிது ஆற்றொணாக் கொடுநோய்
அதனினுங் கொடிது அன்பிலாப் பெண்டிர்
அதனினுங் கொடிது இன்புறவவர்கையி லுண்பது தா [னே.

வறுமை.

தரித்திரங் களிப்பாங் கடலுக்கோர் வடவை சாற்று மெண்ணங்கள்வா ழிடமாம்,தரித்திரம் பற்ப றுக்கமுந் தோன்றத் தக்கபே ராகர மென்ப, தரித்திரநன்மை சாலொழுங் கென்னுந் தழைவனந் தனக்கழ றணலாம், தரித்திரங் கொடிய வெவற்றினுங் கொடிதத் தகையதை யொழித்தனன் றுமே. ௩௩௰

தரித்திர மிக்க வனப்பினை யொடுக்கிச் சீரத்தை யுலர்தரவாட்டுங், தரித்திர மளவாச் சோம்பலை யெழுப்புஞ் சாற்றரு முலோபத்தை மிகுக்கும், தரித்திரந் தலைவன் றலைவியர்க் கிடையே தடுப்பருங் கலாம்பல விளைக்குந் தரித்திர மவமானம்பொய்பே ராசை தருமிதிற் கொடியதொன் றிலையே.

நிறைபொரு ளுடையவர் நிந்தை சொல்லினும்
முறையுறு வழக்கென மொழிந்து போற்றுவர்
வறுமைமிக் குடையவர் வழக்கும் வாய்மொழி
அறமொழி யாகினு மதனை யெள்குவர். ௩௩௨

தாங்கொணு வறுமை வந்தாற் சபைதனிற் செல்ல நாணும்
வேங்கைபோல் வீரங் குன்றும் விருந்தினர்க் காணினாணும்
பூங்கொடி மனையாட் கஞ்சும் புல்லருக் கிணக்கஞ் செய்யும்
ஓங்கிய வறிவு குன்று முலகெலாம் பழிக்குந் தானே. ௩௩௩

ஆவின மழைபொழிய வில்லம் வீழ - வகத்தடியாள் மெய்நோவ வடிமை சாவ, மாவீரம் போகுதென்று விதைகொண் டோட - வழியிலே கடன்காரர் மறித்துக்

கொள்ளச், சாவோலை கொண்டொருவ னெதிரே செல்லத் தள்ளவொண்ணு விருந்துவரச் சர்ப்பந் தீண்டக், கோவேந்த ருழுதுண்ட பகுதிகேட்க - குருக்கள் வந்து தட்சணைக்குக் குறுக்கிட்டாரே. ௧௧௪

பெருத்திடு செல்வம்வந் துற்ற போதுகண்
உருத்தெரி யாமலே யொளிம ழுங்கிடும்
மருத்துள தோவெனில் வாக டத்திலே
தரித்திர மென்னுமோர் மருந்திற் றீருமால். ௧௧௫

தரித்திர மென்பிணி தான்வந் துற்றிடில்
கருத்தழிந் துண்பதற் கேக லங்குவார்
மருத்துள வோவெனின் மாநி லத்திலே
பொருத்தவொண் செல்வமென் மருந்திற் போகுமே.

தரித்திரத்திற்கேது.

காலை மாலை யுறக்கமுங் காரிகை
கோல மேனி குலைந்தபின் கூடலுஞ்
சாலி ராத்தயிர் சாதமோ டுண்டிடில்
மாலோ டாகினு மாது பிரிவளே. ௧௧௭

இஞ்சி நெல்லி யிலைக்கறி பாகற்காய்
கஞ்சி வெண்டயிர் கங்கு லருந்திடில்
பிஞ்சி பூமகள் போயுடன் மூத்தவள்
கொஞ்சிக் கொஞ்சிக் குலாவி நடிப்பளே. ௧௧௮

இன்மை.

தன்னுடன் பிறவாத் தம்பி தனைப்பெருந் தாயார் தந்தை
அன்னிய ரிடத்துச் செல்வ மரும்பொருள் வேசை யானை

மன்னிய வேட்டின் கல்வி மறுமனை யாட்டி வாழ்க்கை
இன்னவாங் கரும மெட்டு மிடுக்கத்துக் குதவா வன்றே. ()

குரைகடல் வறுமையுங் குறத்தி யுண்மையும்
நரையற மருந்துதின் றிளமை நண்ணலும்
விரைசெறி குழலினாள் வேசை யாசையும்
அரைசுற வடைவது மஞ்சு மில்லையே. ௩௪௰

அழிவன.

மூப்பிலாக் குமரி வாழ்க்கை முனையிலா வரசன் வீரம்
காப்பிலா விளைந்த பூமி கரையிலா திருந்தவேரி [ஞானம்
கோப்பிலான் கொண்ட கோலங் குருவிலான் கொண்ட
ஆப்பிலாச் சகடு போல வழியுமென் றுரைக்க லாமே. ()

நிட்டூர மாக நிதிதேடு மன்னவனும்
இட்டதனை மெச்சா விரப்போனும்-முட்டவே
கூசிநிலை நில்லாக் குலக்கொடியுங் கூசிய
வேசியுங் கெட்டு விடும். ௩௪௨

நம்பப்படாதன.

கல்லாத மாந்தரையுங் கடுங்கோபத் துரைகளையுங் கா லந்தேர்ந்து,சொல்லாத வமைச்சரையுந் துயர்க்குதவாத் தே வரையுஞ் சுருதி நூலில், வல்லாவந் தணர்தமையுங் கொண் டவனோ டெந்நாளும் வலது பேசி, நல்லார்போ லருகிருக்கு மனைவியையு மொருநாளு நம்பொ ணாதே. ௩௪௩

ஐவகைத்தாயார்.

தன்னை யளித்தா டமையன் மனைகுருவின்
பன்னி யரசன் பயிறேவி-தன்மனையைப்

பெற்றா ளிவரையே பேசி லெவருக்கும்
நற்றாய ரென்றே நவில். ௱௪௪

ஐவகைத் தந்தையர்.

பிறப்பித்தோன் வித்தைதனைப் பேணிக்கொடுத்தோன்
சிறப்பி னுபதேசஞ் செய்தோ-னறப்பெரிய
பஞ்சத்தி லன்னம் பகிர்ந்தோன் பயந்தீர்த்தோன்
எஞ்சாப் பிதாக்களென வெண். ௱௪௫

தந்தைதாயுரைப்பது தவறப்படாதெனல்.

தந்தையுரை தட்டினவன் றாயுரை யிகழ்ந்தோன்
அந்தமுறு தேசிகர்த மாணையை மறந்தோன்
வந்தமுறை வேதநெறி மாறினவ னல்வர்
செந்தழலின் வாயினிடை சேர்வதுமெய் கண்டீர். ( )

வணங்கவேண்டுபவர்.

இறைவன் சேவகர்க் கெழுத லில்லவட்
கறைகழல் கணவன்மா ணுக்கர்க் காரியன்
முறையல மாமர்க்கு மருகன் மூப்பினும்
மறைதரு முறையினால் வணங்கல் வேண்டுமால். ௱௪௭

கற்றவர் பெருமை.

மன்னனு மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின்
மன்னரிற் கற்றோன் சிறப்புடையன்-மன்னனுக்குத்
தன்றேச மல்லாற் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்றவிட மெல்லாஞ் சிறப்பு. ௱௪௮

ஆற்றவுங் கற்றா ரறிவுடையா ரஃதுடையார்
நாற்றிசையுஞ் செல்லாத நாடில்லை-யந்நாடு

வேற்றுநா டாகா தமவேயா மாயினல்
ஆற்றுணு வேண்டுவ தில். ருசசு

கேள்விமுயல்.

முன்பகவற் கீதை முனியுரைக்கக் கன்னிமரந்
தன்படியே கேட்டுலகிற் றூர்வேந்தா-அன்புறல் போல்
மாதவனே புன்னை வனநாதா நன்மையுற
மூதறிவோர் கேள்வி முயல். ருரு

உணற்கினிய வின்னீர் பிறிதுழியில் லென்னுங்
கிணற்றகத்துத் தேரைபோ லாகார்-கணக்கினை
முற்றப் பகலு முனியா தினிதோதிக்
கற்றலிற் கேட்டலே நன்று. ருக

செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கு மீயப் படும். ருஉ

செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்க
ளவியினும் வாழினு மென், ருரு

இருவிழிகள் வாண்முகத்தி லிருந்தாலும் வானிரவி யெழுந்தாலன்றிக், கருதுநிலம் பல்பொருளுங் காண்டலரிதாமுலகிற் கண்போல்யாரும், பெருகியசெல் வமுமறிவும் பெற்றாலு நூற்கேள்வி பெறுவார்க்கன்றித், திருவளர்புண் ணியபாவ நிம்மைமறு மையும்விடுந் தெரியாவன்றே. ருச

மேன்மக்கள்.

கள்ளார்கள் ளுண்ணார் கடிவ கடிந்தோரீஇ
யெள்ளிப் பிறரை யிகழ்ந்துரையார்.தள்ளியும்

வாயிற் பொய் கூறார் வடுவறு காட்சியார்
காயிற் பரிவ திலர். ௱௫௫

ஒற்கந்தா முற்ற விடத்து முயர்ந்தவர்
நிற்பவே நின்ற நிலையின்மேல்-வற்பத்தால்
தன்மே னலியும் பசிபெரி தாயினும்
புன்மேயா தாகும் புலி. ௱௫௬

அட்டாலும் பால்சுவையிற் குன்றா தளவல்ல
நட்டாலு நண்பல்லர் நண்பல்லர்-கெட்டாலு
மேன்மக்கண் மேன்மக்க ளேசங்கு சுட்டாலுந்
தான்மிக்க வெண்மை தரும். ௱௫௭

உலகத்தாரியல்பு

இகழி னிகழ்ந்தாங் கிறைமக னென்று
புகழினு மொக்கப் புகழ்ப இகன்மன்னன்
சீர்வழிப் பட்டதே மண்பதைமற் றென்செய்யு
நீர்வழிப் பட்ட புணை. ௱௫௮

உலகத்தா ருள்ளதென்ற துள்ளதா மொலிநீர் வேலை
உலகத்தா ரில்லதென்ற தில்லையா முணருங் காலை
உலகத்தா ருள்ளதென்றதில்லையென் றுரைக்குமாகின்
உலகத்துக் கவன்பே யாகு முண்மையாற் பயனொன்றில்லை.

பெண்கொடுப்போர் கவனிக்கவேண்டியவை

பெண்ணுதவுங் காலைப் பிதா விரும்பும் வித்தையையே
யெண்ணி றனம்விரும்பு மீன்றதாய் - நண்ணிடையிற்
கூறியநற் சுற்றங் குலம்விரும்புங் காந்தனது
பேரழகு தான் விரும்பும் பெண். ௱௬௰

குலம்வேண்டு மென்றிருப்பார் குலத்துள்ளார் கல்வியி னூற் குறையா ஞானப், பலம்வேண்டு மென்றிருப்பார் தந் தைமார் பரந்தபெருஞ் செல்வ முள்ள, தலம்வேண்டு மென் றிருப்பார் தாய்மார்க ளெவ்வனமு மழகுஞ் சார்ந்த, நலம்வே ண்டு மென்றிருப்பார் நாறுகுழ னங்கைமார் நலத்தின் மிக் கார். ருசுக

மகட்கொடை செயத்தக்கவர்.

புரைதபு குணனுஞ் சீலமும் வனப்பும் பூரண வாயுளுந் தூப்பும், கரையில்விற் பனமும் பாலனம் புரியுங் கருத்தருங் குறைவிலா தாக, விரவுசெல் வமுமா மெண்வகை யுடைய வாடவர் விருப்புறு வண்ணம், பரவினின் றவர்க்கு மகட்கொ டை யுதவல் பருணிதர் கடமைய தாமால். ருசுஉ

மகட்கொடை செயத்தகாதவர்.

மூத்தியில் விருப்ப முடையவன் மிடியன் மூர்க்கன்சே ண்டேயந்தி லுள்ளோன், புத்தியில் வயிரம் பொருந்திய சூ ரன் புதல்விதன் வயதின்மும் மடங்கு, தத்திய வயது ளோ னினர் தமக்குத் தரணியி லொருவரு முள்ளம், நத்திநன் மகளைத் தரத்தகா தென்னக் கணிதநூ னவின்றிடு மன்னே.

பிறரறியவேண்டியவை.

தகுதிகொள் கடனக் கடன்றனைத் தீர்த்த றுன்பொருள் கோடல்பின் பகர்தல், மகளிரைக் கொடுத்தல் தன்னுடை யொழுக்க மரபினிற் புரிந்ததன் பாவம், புகலரு மயலோர் நற்குண மென்னப் புகன்றவிவ் வொன்பது மெவர்க்கும், இக

லற மறையா துரைத்திட லொழுக்கத் தியல்பென மொழிவர்
நன் குணர்ந்தோர். ௱௬௪

பிராறியத்தகாதவை.

குருவுப தேச மாதர் கூடிய வின்பந் தன்பால்
மருவிய நியாயங் கல்வி வயதுதான் செய்த தன்மம்
அரியமந் திரம்வி சார மாண்மையிங் கிவைக ளெல்லாம்
ஒருவருந் தெரிய வொண்ணு துரைத்திடி லழிந்து போமே.

மந்திரந் தன்னைப் பிறரவ மதித்தல் மகளிரைச் சேர்
தல்வஞ் சனைதன், நந்தலி லாயுள் பிறந்தநா ளில்லி னண்ணிய
குற்றநீ ணிதிய, முந்திய கற்பின் மனைவிதன் குணங்கண்
மொழிந்தவிவ் வொன்பது மாவி, சிந்துற வரினும் பிறரொடு
மொழித ரீதென வுரைத்தனர் தெளிந்தோர். ௱௬௫

இவர்பாவமிவரையடையுமெனல்.

மண்டலத் தோர்கள் செய்த பாவமன் னவரைச் சேரும்
திண்டிறல் மன்னர் செய்த தீங்குமந் திரியைச் சேரும் [ருந்
தொண்டர்கள் செய்ததோடந் தொடர்ந்துதங் குருவைச் சே
கண்டன மொழியாள் செய்த கர்மமுங் கணவற் காமே. ()

வருத்திற்பயன்றருவன.

துர்ச்சனரும் பொன்னுந் துடியுந் துரகதமும்
அச்சமற முன்னிற்கு மாயிழையும் - நச்சரவும்
கண்டித்த வெள்ளுங் கரும்புமிள நீரும்
தண்டித்தார்க் கன்றோ சயம். ௱௬௮

தாழ்வறியாதோர்.

மங்கையர் விருந்தினர் வயித்திய ரிரப்போர்
பங்குபிணி யாளரொடு பாலகர் விருத்தர்
அங்கமறை வேதியரு மந்தகரு மன்னர்
தங்கள்குறை யால்வருமோர் தாழ்வுமறி யாரே. ௩௬௯

மூர்க்கரைமூர்க்கர்மகிழ்வர்.

கழுதை காவெனக் கண்டுநின் றாடிய வலகை
தொழுது மீட்டுமக் கழுதையைத் துதிசெய வதுதான்
பழுதி லாநமக் கார்நிக ராமெனப் பகரும்
முழுது மூடரை மூடர்கொண் டாடிய முறையே. ௩௭௦

நற்றும ணாக்கபத்தி னல்லன்னஞ் சேர்ந்தாற்போற்
கற்றாரைக் கற்றார் காமுறுவர்-கற்கிலா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டிற்
காக்கை யுகக்கும் பிணம் ௩௭௧

வைதலின்பம்

கதலி வீரர் களத்திடை வையினும்
குதலை வாயிற் குழவிகள் வையினும்
மதன லீலைபின் மங்கையர் வையினும்
இதமு றச்செவிக் கின்பம் விளையுமே. ௩௭௨

கடாவி டுஞ்சமர்க் களத்தினும் மடந்தைய ரிடத்தும்
விடாம லோதிய கவிதைபா ராட்டிய விடத்தும்
நடாவி டுஞ்சிறு பிள்ளைக ணவிலுமவ் விடத்தும்
அடாவெ னுஞ்சொலை யின்சொலாய் மதிப்பர்கற் றறிந்தோர்.

துன்புறுத்துபவை.

தட்டா னிடத்திற் றங்கப் பணிகள் சமைப்பதுவும்
வட்டாடு வாரைத் திருத்திநன் மார்க்கத்தில் வைப்பதுவும்
பட்டாங்கு காகிதப் புத்தக மச்சிற் பதிப்பதுவும்
தொட்டார் மனத்தைப் பலவாறு நாளுந் துயர்செய்யுமே.

பாலுக்குச் சர்க்கரை யில்லை யென்பார்க்கும் பருக்கை யற்ற, கூழுக்குப் போடவுப் பில்லையென் பாருக்குங் குத்தித் தைத்த, காலுக்குத் தோற்செருப் பில்லையென் பார்க்குங் கனகதண்டி. மேலுக்குப் பஞ்சணை யில்லையென் பார்க்கும் விசன மொன்றே. ௧௭௫

தினைத்துணை யுணவுபி றிலாத சிற்றெறும்
பினத்தொடு மலையென விருக்கும் யானையும்
கனத்துரு பசியினாற் கலங்கு கின்றன
மனத்துயர் நீங்கினா ரில்லை மன்னனே. ௧௭௬

கொல்லவேண்டுவோர்.

கருவிநஞ் சாதி தம்மாற் காமரா ருயிரைக் கொல்வோர்
வெருவுறச் சூறை கொள்வோர் மேவியா றலைப்போர் கள்வர்
உருவளர் பிறனில் வேட்போ ருவர்முத லோரைக் கோறல்
பருவரு பாவமன்று பயிர்களைக் களைதல் போலாம். ௧௭௭

காரியமுடிவில்நன்றிபாராட்டாதோர்.

பிள்ளை தான்வயதின்மூத்தாற் பிதாவின்சொற்புத்திகேளான்
கள்ளினற் குழலாண் மூத்தாற் கணவனைக் கருதிப்பாராள்
தெள்ளற வித்தை கற்றாற் சீடனுங் குருவைத் தேடான்
உள்ளநோய் பிணிக டீர்ந்தா லுலகர்பண் டிதரைத் தேடார்.

உயிரிழப்போர்.

அரவினை யாட்டு வாரு மருங்களி றூட்டு வாரும்
இரவினிற் றனிப்போ வாரு மேரிநீர் நீந்துவாரும்
விரைசெறி குழலியான வேசையை விரும்பு வாரும்
அரசனைப் பகைத்திட் டாரு மாருயி ரிழப்பர் மாதோ.

இதனால் வியாதி யுண்டாமெனல்.

தன்னைத்தான் பேணு தாலுஞ் சரீரத்தின் றண்டிப் பாலும்
பின்னுற்ற விசாரத் தாலும் பின்சல மலத்தினாலும்
அன்னத்தை யொறுப்ப தாலு மடைவுடன் முழுக லாலும்
தன்மத்தை யிகழ்வ தாலுஞ் சரீரத்தில் வியாதி தோன்றும்.

இடும்பைக்கிழியாமை.

வைத்திடுந் தனத்தாற் சேதம் வளர்ந்திடு முயிர்க்குச் சேதம்
உற்றிடு வியாகூலங்க ளியாவர்க்கு முளதே யென்றும்
புத்திமான் றனக்குத்தானே மனதிலே தேறிக் கொண்டு
சுத்தனாய் நகைத்தானாகிற் றுயரது தோற்கு மன்றே. ௯அக

அடுக்கி வரினு மழிவிலா னுற்ற
விடுக்க ணிடுக்கட் படும். ௯அ௨

இன்பத்து ளின்பம் விழையாதான் றுன்பத்துட்
டுன்ப முறுத லிலன். ௯அ௯

குடையின் விசேடம்.

பகலோன் றெறுகிரணம் பாய்பறவை யெச்சம்
மிகமே லுறாதகற்றும் விண்ணின் - முகிலதினால்
பெய்புமழை யைத்தடுக்கும் பேரழகு மாமொருவன்
கையிற் குடை யிருந்தக் கால். ௯அ௪

கைத்தண்டின் விசேடம்.

முனியதட்டு முட்டுக்கு முன்னீ ரளக்கும்
கனியுதிர்க்குங் கவ்வுநாய் காக்கும் - தனிவழிக்குப்
பத்திரம தாக்கும் பயந்தீர்க்கும் பாம்படிக்கும்
கைத்தலத்திற் றண்டிருந்தக் கால். ௬அ௫

செருப்பின் விசேடம்.

கல்லு முறுத்தாது காலின்முட் டையாது
எல்லைமார்த் தாண்டன்சூ டேறாது - தொல்லைவரு
மாலை யிருளில் வழிநடக்கக் கூசாது
காலிற் செருப் பிருந்தக் கால். ௬அ௬

சயனமுறைமை.

அன்னத்தின் றாவிகோங் காகு மரசற்குப்
பன்னும் பருத்திதான் பாங்கலவே-அன்னதனல்
மன்ன னெனும்புன்னை வனநாதா மையிரவிற்
றுன்னிலவம் பஞ்சிற் றுயில். ௬அ௭

இணையிறன தில்லிடத்தே கீழ்திசையிற் றலைவைக்க வினிய மாமன், மணிதிகழ்பொன் னெடுமாடத் துறைந்திடிறென் றிசைதனிலே வைக்க வேண்டும், அணிபெறுவேற் றாருறையிற் குடதிசையின் மீதுவைப்ப ரதுவே யன்றி, உணரவிலா துத்தரத்தே தலைவைத்துத் துயில்புரிதலொண்ணு தாமால். ௬அஅ

நித்திரை யசன மெண்ணெய் நிறைமயிர்ச் சவர நான்கும்
உத்தமங் கிழக்கு நன்று மோங்குயிர் வளருந் தெற்கு

சித்தமுங் கலங்கு மேற்குத் தீங்குவந் தடையு மூலை
அத்தமும் வாழ்வுங் கேடா மன்பிலா வடக்குத் தானே. ()

நித்திரைசெய்நேரத்தின்பயன்

காலைதுயில் சீலம்போங் கண்டபக லாக்கம்போ
மாலைதுயி ேனாயாம் வகையறிந்து-ஞாலமதிற்
புண்ணியகா லந்தெரிந்தே புன்னை வனநாதா
எண்ணி யனந்தலா டேல். கசுய

எண்ணெயிடுநாள்.

ஞாயிறுயிர்க் கீறுதிங்க ணம்பரருள் செய்கிலர்செவ்
வாய்பிணிதுக் கங்குருநாள் வாழ்வுபோம்-தூயவெள்ளி
போடிதெல்லாம் புன்னைவன பூபாலா மிக்கபுத
னோடுசனி நீராடு. கசுக

போஜன முறைமை.

ஒருபோது யோகியே யொண்டளிர்க்கை மாதே
இருபோது போகியே யென்பர் - திரிபோது
ரோகியே நான்குபோ துண்பா னுடல்விட்டு
போகியே யென்று புகல். கசுஉ

சூது

தோராத நூற்றுவருந் தோற்றபஞ்ச பாண்டவரும்
பாரே யகன்றுபட்ட பாரதம்பார் - பேராண்மை
வற்றாத புன்னைவன மாகடலே மிக்கசெல்வம்
பெற்றாலுஞ் சூதுவிரும் பேல். கசுக

ஐயநீ யாடுதற் கமைந்த சூதுமற்
றெய்துநல் குரவினுக் கியைந்த தூதுவெம்

பொய்யினுக் கருந்துணை புன்மைக் கீன்றதாய்
மெய்யினுக் குறுபகை யென்பர் மேலையோர். ௩௯௪

அறத்தைவேர் கல்லு மருநரகிற் சேர்க்குந்
திறத்தையே கொண்டருளைத் தேய்க்கு-மறத்தையே
பூண்டுவிரோ தஞ்செய்யும் பொய்ச்சூதை மிக்கோர்கள்
தீண்டுவரோ வென்றார் தெரிந்து. ௩௯௫

உருவழிக்கு முண்மை யுயர்வழிக்கும் வண்மைத்
திருவழிக்கு மானஞ் சிதைக்கு - மருவும்
ஒருவரோ டன்பழிக்கு மொன்றல்ல சூது
பொருவரோ தக்கோர் புரிந்து. ௩௯௬

சிறுமை பலசெய்து சீரழிக்குஞ் சூதின்
வறுமை தருவதொன்றில். ௩௯௭

அகடாரா ரல்ல லுழப்பர்சூ தென்னு
முகடியான் மூடப்பட் டார். ௩௯௮

கள்ளுண்ணல்.

அறிவை யழிக்குஞ் செய லழிக்கும்
அழியா மானந் தனை யழிக்கும்
செறிவு மறிஞர் மதி யாத
செருக்கை விளைக்கு மீன்றாளும்
முறியும் வெறுப்பு மிக விளைக்கு
முனிவு விளைக்கும் பகை யஞ்சாக்
குறிகள் விளைக்கு நகை விளைக்குங்
கொள்ளேல் கள்ளுண் டலை மைந்தா ௩௯௯

துஞ்சினோர் செத்தாரின் வேறல்ல ரெஞ்ஞான்று
நஞ்சுண்பார் கள்ளுண் பவர். சா

களவு.

அரிமுழை நுழைதல் போல வயலகம் புகும்போ தச்சம்
பொருடிரு டும்போ தச்சம் புறப்பட்டே குங்கா லச்சம்
தெருவினி லெவர்க்கு மச்சங் கவர்ந்தன திளைக்க வச்ச,
முருமுருக் கொண்டுகள்வ ருளங்குடி கொண்ட போலும்.

களவினு லாகிய வாக்க மளவிறந்
தாவது போலக் கெடும். சாஉ

நெஞ்சைப்பழித்தல்.

அன்பிலா நெஞ்ச மரும்பிணி யெனவு மளவிலாப் பகை நமக் கெனவும், துன்பமார் சோக மோகமே முதலாந் துயரெலாம் விளைநில மெனவும், இன்பவீ டெய்தா திடைக் கிடை யூறு மிருளுமென் றியம்புவர் பெரியோர், துன்பிலா விறைவர்க் கன்பிலா நெஞ்சே துணையிலே துணையிலே யெனக்கே. சாஙு

மனச்சேட்டைஇத்தகையதெனல்.

குரங்கனலில் விழ்ந்துவெறி கொண்டுதேள் கொட்டக்
கரஞ்செறியப் பாம்பலவன் கவ்வ - விரைந்துபேய்
பற்றவே கள்ளுண்டு பச்சைமிள கைக்கடித்தால்
எத்தனைபார் சேட்டைக் கிடம். சாச

இம்மைச்சொர்க்கம்.

நற்குண முடைய வேந்தை நயந்துசே வித்த லொன்று
பொற்புடை மகளி ரோடு பொருந்தியே வாழ்த லொன்று

பற்பல ரோடு நன்னூல் பகர்ந்துவா சித்த லொன்று
சொற்பெறு மிவைகண்மூன்று மிம்மையிற் சொர்க்கந்தானே

நம்பி மோசம்போதல்.

சம்புவே யென்ன புத்தி சலந்தனின் மீனை நம்பி
வம்புறு வடத்தைப் போட்டு வானத்தைப் பார்ப்ப தேனோ
அம்புவி மாதே கேளா யரசனை யகல விட்டு
வம்பனைக் கைபிடித்த வாறுபோ லாயிற் றன்றே. ௨௱௯

ஓரியே மீனுவந் தூண்ணி ழுந்தையோ
நாரியே கண்பிழை நாட்டி லில்லையோ
பாரிய கணவனைப் பழுது செய்தநீ
நீரிலே யிருப்பது நிலைமை யல்லவே. ௨௱௰

கானலை நீரென்றெண்ணிக் கடுவெளி திரியு மான்போல்
மானுறு மிலவுகாத்த மதியிலாக் கிள்ளையேபோல்
தேனினைக் கண்டுதும்பி தியங்கிய தம்மையேபோல்
நானுனை யரசென்றெண்ணி நாளையும் போக்கினேனே. ௨௱௮

ஒருபெண்ணைக்கண்டு காமமிகுதியாற் சொல்லியது.

ஒருநான்கு மீரரையு மொன்றே கேளா-புண்மையா மை யரையு மரையுங் கேட்டேன், இருநான்கு மூன்றுமொரு வொன்றுஞ் சொல்லா-யிம்மொழியைக் கேட்டபடி யீந்தாயா யின், பெருநான்கு மறுநான்கும் பெறுவாய் பெண்ணே-பி ன்னையோர் மொழியுரைக்க வேண்டாம் மென்றே, சரிநான் கு பத்துமொரு பதினைந் தாலே-சகிக்கமுடி யாதெனக்குச் சகியே மானே. ௨௱௯

இதனிலும் இது நன்றெனல்.

பசி பிடலி னிடாமைப் நன்றெதிரிற்
பேசு மனையாளிற் பேய்நன்று - நேசமிலா
வங்கணத்தி னன்று வலியபகை வாழ்வில்லாச்
சங்கடத்திற் சாவதே நன்று. ௨௱௰

நடைதனக்கு யானை வனப்பாகும் பெண்ணின்
இடைதனக்கு நுண்மை வனப்பாம்-நடைதனக்குக்
கோடா மொழிவனப்புக் கோற்கருவே சேவகர்க்கு
வாடாத வன்கண் வனப்பு. ௨௧௧

மதியாதார் முற்ற மதித்தொருகாற் சென்று
மிதியாமை கோடி பெறும்
உண்ணீருண்ணீரென் றுபசரியார் தம்மனையில்
உண்ணாமை கோடி பெறும்
கோடி கொடுத்துங் குடிப்பிறந்தார் தம்மோடு
கூடுதல் கோடி பெறும்
கோடானு கோடி கொடுப்பினுந் தன்னுடைநாக்
கோடாமை கோடி பெறும். ௨௧௨

இவையில்லாதார் ஒன்றுக்குமுதவாரெனல்.

கருதிய நூல் கல்லாதான் மூடனாகுங்-கணக்கறிந்து பேசாதான் கசடனாகும்,ஒருதொழிலு மில்லாதான் முகடியாகு-மொன்றுக்கு முதவாதான் சோம்பனாகும், பெரியோர்கண் முன்னின்று மரத்தைப்போலும்-பேசாம லிருப்பவனே பேயனாகும், பரிவுசொலித் தழுவினவன் பசப்பனாகும்-பசிப்பவருக் கிட்டுண்ணான் பாவி யாமே. ௨௧௩

கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள் - சபைநடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவனன் மரம். ௪௧௪

ஆக்குபஞ் சாக்கர மில்லாத நாவுக்கு மன்னை யற்ற
சேய்க்கும் பசியற்ற நேரத்தி லூணுக்குஞ் சீவித்தின்னுப்
பாக்கும்பெண் பாலற்ற நித்திரைக் கும்புதுப் பானைபுகும்.
ஈக்குஞ் சுகமுமுண் டோவெள்ளை நாவ லிருப்பவனே. ௪௧௫

அன்போடிடும் அன்னமும் அஃதின்றிய அன்னமும்.

கெட்டசாறு தவிடுகஞ்சி கிருமியுண்ட மாவறைக்
கீரைவேர் தெளிந்தமோர் முறிந்தபாகு கிண்டிமா
இட்டசோறு கொழியலுப்பி டாதபுற்கை யாயினு
மெங்குமன்ப தாகநுங்க வின்பமா யிருக்குமே
பட்டபாகு பசுவினெய் பருப்புமுக்க னிக்குழாம்
பாளிதங்க டாளிதங்கள் பண்ணிகார வகையுடன்
அட்டபாற் குழம்புகன்ன லமுதமோடு முதவினு
மன்பினோ டளித்திடாத வசனமென்ன வசனமே. ()

ஒப்புடன் முகமலர்ந்தே யுபசரித் துண்மை பேசி
உப்பிலாக் கூழிட் டாலு முண்பதே யமிர்த மாகும்
முப்பழ மொடுபா லன்னம் முகங்கடுத் திடுவாராகில்
கப்பிய பசியும்போக்கிக் கடும்பசி நல்கு மம்மா. ௪௧௭

காணக்கண் கூசுதே கையெடுக்க நாணுதே
மாணொக்க வாய்திறக்க மாட்டாதே - வீணுக்கென்
என்பெல்லாம் பற்றி யெரிகின்ற தையையோ
அன்பிலா ளிட்ட வமுது, ௪௧௮

விடு கதை.

சீராடை யற்ற வைரவன் வாகனஞ் சேரவந்து
பாராரு நான்முகன் வாகனந் தன்னைமுன் பற்றிக்கௌவி
நாரா யணனுயர் வாகன மாயிற்று நம்மைமுகம்
பாராண்மை வாகனன் வந்தே வயிற்றினிற் பற்றினனே. ()

கார்படைத்த கரதலத்தான் றுரைதிருவேங் கடமரி த்த கன்னு வெங்கும், பேர்படைத்த வானந்த ரங்கமகி பாலாதின் பிரம்பூர் நாட்டில், நேரிழைக்கு விழியேழு முலை யாறு காதைந்து நெற்றி நான்கு, பாரிடத்தி லிப்புதுமை கண்டு வந்தே னிதன்பயனைப் பகர்ந்திடாயே. சஉ௰

ஆவியனை யாளையோர் பொழுதுபிரிந் தவளில்ல மனு குங்காலை, மேவுபாங் கியைக்கண்டாண் டுணையின்றி வருந்தின ளோ மின்னு ளென்றேன், நாவிதனுக் குண்டோகாண் மயிர் ப்பஞ்ச மலப்பஞ்ச நாய்க்கு முண்டோ, தேவிதனக் குண் டோவாண் பஞ்சமென்று ளதன்பொருளைத் தெரிகிலேனே.

முன்னொரு வூரின் பேரா முதலெழுத் தில்லா விட்டால்
நன்னகர் மன்னன் பேரா நடுவெழுத் தில்லா விட்டால்
கன்னமா மிருகத்தின்பேர் கடையெழுத் தில்லா விட்டால்
உன்னிய தேனின் பேரா மூரின்பேர் விளம்பு வீரே. சஉஉ

நாலெழுத்து ப்பூடு நடுவே நரம்பிருக்குங்
காலுந் தலைபுங் கடைச்சாதி - மேலே
யொட்டு முதலெழுத்து மோங்குமூன் றுமெழுத்தும்
விட்டாற் பரமனுக்கு வீடு. சஉ௩

கூந்தல்.

முகிலையென் றறலைக் கடிந்துசை வலத்தை முனிந்து பொற் கடுக்கையை முடுக்கி, அகிலறும் புகையுந் தகரமும் புழுகு மீளஇப்பனி நீரிலே நனைந்து, பகலவற் குடைந்த வசையினால் வெள்கிப் பனிமலர்த் தாரணிந் தவனோ, டிகல் செயக்கருதி யிருடிரண்டாலித் தெழுந்தன செழுந்தடங் குழலாள். ௪௨௪

கண்.

கடலினைக் கயலைக் கணையைமென் பிணையைக் காவி யைக் கருவிள மலரை, வடுவினைக் கொடிய மறலியை வலையை வாளைவென் றறவுநீண் டகன்று, கொடுவினைக் குடிகொண் டிரு புறந்தாவிக் குமிழையுங் குழையையுஞ்சீறி விடமெனக் கறுப் புற் றரிபரந்துன்கை வேலினுங்கூரிய விழியாள். ௪௨௫

அலகு வாள்விழி யாயிழை நன்னுதல்
திலகங் கண்டெதிர் செஞ்சிலை மாரனுங்
கலக மேசெயுங் கண்ணிது வாமென
மலரம் பைந்தையும் வைத்துவ ணங்கினன். ௪௨௬

தண்டு லாவிய தாமரைப் பொய்கையில்
மொண்டு நீரைமு கத்தரு கேந்தினள்
கெண்டை கெண்டை யெனக்கரை யேறினள்
கெண்டை காண்கில ணின்று தியங்கினள். ௪௨௭

பயிர்கலைய்ந் தனவும் பட்டமா மரமும் பண்டைநா ளுக்க வெள்ளென்பும், உயிர்பெறப் பொருட்டுப் பளிதமும் பாலு மொழுகிய தேனுமா ரமுதும், குயிலினின் குரலுங் கிளியி

னின் மொழியுங் குழலும்யா ழுங்குழைத் திழைத்து, மயிலி யற் சாயல் வாணுத றனக்கு மலரயன் வகுத்ததென் மொழியாள். சஉஅ

வண்டு மொய்த் தனைய கூந்தன் மதனபண் டாரவல்லி
கெண்டையோ டொத்த கண்ணாள் கிளிமொழி வாயினூறல்
கண்டுசர்க் கரையோ தேனோ கனியொடு கலந்த பாகோ
அண்டர்மா முனிவர்க் கெல்லா மமுதமென் றளிக்க லாமே.

இருப்பைவிட் டயனார் நெடிதுநாட் டவஞ்செய் திருகையுஞ் சிந்தையும் வருந்திச், செருப்பயின் றிறந்தமதனனைச் சூட்டத் திருமுடி வேண்டுமென் றியானை, மருப்பையுங் கும்பத்தலத்தையுஞ் சக்ரவாகத்தை யும்வட கனகப், பொருப்பையும் படைத்துத் தெளிந்தபின் படைத்தபுளகித பூரண முலையாள். சஙய

துப்புறச் சிவந்த வாயாள் தூயபஞ் சணையின் மீதில்
ஒப்புறக் கணவனோடே யுயர்லீலை செய்யும் போது
கப்புரஞ் சேர்ந்த மார்பிற் கனதன மிரண்டுந் தைத்தே
அப்புற முருவிற் றென்றே யங்கையாற் றடவிப்பார்த்தாள்.

இ டை.

சுணங்குபூத் தொருகாழ் மணிவடங் கிடந்த துணையிள வனமுலை சுமந்து, வணங்கினா டோறுந் தேய்ந்ததோ பெருகும் வனப்பெனுங் கடலுளாழ்ந் ததுவோ, கணங்கொள்வண் டார்க்குங் கணையதன் கண்ணோ றெய்தலுங் கழிந்ததோவன்றி, யணங்கர வல்குற் றேர்மிசை வதியு மனங்கனோ விடையறி கிலேமால். சஙஉ

அறந்திகழ் தவமு மகிலமு மிதனு லழியுமென் றயன் படைத் திலனே, சிறந்தவேல் விழியை முன்படைத் தயர்ந்து செங்கரஞ் சோர்ந்ததோ திகைத்து, மறந்ததோ கரந்து வைத்ததோ களப வனமுலைப் பொறைசுமந் துருகி, இறந்ததோ வுளதோ வில்லையோ வினிமே லெய்துமோ வறியொ ணு திடையே. சுகூங

ஸ்திரீயின் அவயவச் சிறப்பு.

அன்னம் பழித்தநடை யாலம் பழித்தவிழி யமுதம் பழித்த மொழிகள், பென்னம் பெருத்தமுலை கன்னங் கறுத்த குழல் சின்னஞ் சிறுத்த விடையாள், என்னெஞ் சுருக்கவவ டன்னெஞ்சு கற்றகலை யென்னென் றுரைப்ப தினி நான், சின்னஞ் சிறுக்கியவள் வில்லங்க மிட்டபடி தெய்வங்களுக்கபயமே. சுகூச

காட்சி.

மேகம்பிறைசிலை வேல்குமிழ்வள்ளை வெண் முத்தம்தொண்
பூகம்பசுங்கழை தேனுமிழ் காந்தள் பொற் பாலிலைநூல் [டை
நாகங் கதலி யலவன்வரானன் நளினமுண்டு
மாகம்பொழிற்றிருத் தில்லையிலே யொரு வல்லியிலே. சுகூரு

இவர்கட்குத்தரித்திரமெனல்.

கவிகற்றவர்க்குங் கணிகற்றவர்க்குங் கம்மாளருக்கும்
ஒவிகற்றவர்க்கு முபாத்திகளுக்கு முயர்ந்தமட்டுங், [கும்
குவிவைதுக்குமொட்டர்க்குங் கூத்தாடிகட்குங் குருக்களுக்
இவரெட்டுப் பேர்கட்கு நீங்காத்தரித்திர மென்றைக்குமே.

கடவுளைப்பேணாரிவரெனல்.

ஆற்றோடு தும்பை யணிந்தாடு மம்பலவாணர் தம்மைப்
போற்றா தவர்க்கடை யாளமுண்டே யிந்தப்பூதலத்திற்
சோற்றாவி யற்றுச்சுகமற்றுச் சுற்றத் துணியு மற்றே
யேற்றாலும் பிச்சைகிடையாம லேக்கற்றிருப்பர்களே. ()

பாம்புசேர் தோளிணையாள் பாளையத்துமாமாரி
ஈம்பசிவன்றன்னடியைச் சாராரை - வேம்பின்
இலையையுடுத்தியவ ரீனமா னம்போக்கித்
தலையில்விளக் கேற்றிவைப்பாள் தான். சஙஅ

உலோபிகள்.

மழவுக்கு மொருபிடிசோ றளிப்பதன்றி யிருபிடியூண் வழங்கி லிங்கே, யுழவுக்கு முதல்குறையு மெனவளர்த்தங் கவற்றையெலா மோகோ பேயின், விழவுக்கும் புலாலுண்ணும் விருந்துக்கு மருந்துக்கு மெலிந்து மாண்டா, ரிழவுக்கு மிடர்கொடுங்கோ லிறைவரிக்குங் கொடுத்திழப்ப ரென்னே யென்னே. சஙக

கல்லாலையமாந் தேவரு மாங்
கழுதைக் கசடர் பொதி சுமக்குங்
கடாவோ வுழுது பயிரிடற் காங்
கட்டம் பன்றிக் கிரை யாகும்
புல்லே றீசன் வாகன மாம்
பொதியுஞ் சுமக்கும் பிண மெனிலோ
பூசிமுடித்து மறையோர்க்குப்
பொருளை யீந்து புக ழெய்தும்

மல்லார் குட்டிச் சுவரெனிலோ
மாடு முரஞ்சு மறைவாகும்
மதியா த்துடப்பந் தானெனிலோ
மாட கூடந் தனை விளக்கும்
அல்லா துலுத்தர் தனக்கிணையா
யாரை யுரைப்பேன் புவிமீதி
லவரைக் குறித்துக் கூறுமிடத்
தவனுக் கவனே சரிதானே. ௪௪௧

பருத்திப் பொதியினைப் போலே வயிறு பருத்த தங்க
டுருத்திக் கறுசுவை போடுகின்றார்துறந் தோர் தமக்கு
வருத்தியமுதிட மாட்டா ரவரையிம் மாநிலத்தி
லிருத்திக்கொண் டேயிருந்தா யிறைவாகச்சி யேகம்பனே.

ஊனுண்போர்க் கஞ்சி விலங்குபட்சி முதலியவை
பலவிடங்களில் ஒளிந்தனவென்பது.

தேனோடு மூனுண்ணு மானிடர்க் கஞ்சிச் சிவன்கரத்தில்
மானோடிப்புக்க தயங்கோழி யோடின மைந்தனிடம்
மீனோடிப்புக்கன விண்ணினுஞ் சிந்தினும் வெவ்விலங்கும்
வானோடியேபல ராசிகளாயுயிர் வாழ்ந்தனவே. ௪௪௨

எவரையும் விதிவிடாதெனல்.

இறகெடுத்த வமணர்குலம் வேரறுத்த சொக்கேயீ தெ
ன்ன ஞாயம், அறுகெடுத்த சடைமுடிமேன் மண்ணெடுக்க
மாட்டாம லடிபட் டையோ. பிறகெடுத்தீர் வளையல் விற்றீர்
சொற்கேளாப் பிள்ளைகளைப் பெற்ற தோடம், விறகெடுத்தீ
ரென்செய்வீர் விதிவசந்தான் யாவரையும் விடாது தானே.

சந்திரனுக் குடலூனந் தனதனுக்கோர் கண்ணூனங் கருவி னீழல், இந்திரர்க்கோ பகக்குறியா மியமனுக்கோ புழுக்காலா மிரவி யீன்ற, மைந்தனுக்கோ கான்முடமாம் வனசனுக்கோர் தலைகுறையாம் வரலா றீதேல் பந்தமுள மானிடரை விதிவிடுமோ வாலவாய்ப் பதியுளானே. சசச

விதியினால் வருவதல்லால் வேதத்தோர் தங்கண்
மதியினால் வாழ்வொன் றில்லைப் - பதிதோறுஞ்
சங்கரனு மையமெடுத் துண்டான் தடங்கடல்சூழ்
மங்கையுடன் காடுறைந்தான் மால். சசரு

அடியார் பொருளைக் கவராமை.

அந்தோ புரமெரித்த வண்ணலடி யார்பொருள்கள்
செந்தீயி னுங்கொடிய தீக்கண்டாய் - செந்தீயை
நீங்கிற் சுடாதே நெடுந்தூரஞ் சென்றாலும்
ஏங்கச்சுடுமே யிது. சசசு

உத்தம, மத்திம, மதமர், செய்கை.

சொல்லாமலேபெரியர் சொல்லிச் சிறியர்செய்வர்
சொல்லியுஞ் செய்யார் கயவரே - நல்ல
குலாமாலை வேற்கண்ணாய் கூறுவமை நாடிற்
பலா மாவைப் பாதிரியைப் பார். சசஎ

உத்தமர்தா மீயுமிடத் தோங்குபனை போல்வரே
மத்திமர்தாந் தெங்குதனை மானுவரே - முத்தலரு
மாங்கமுகு போல்வா ரதம ரவர்களே
தேங்கதலி யும்போல்வார் தேர். சசஅ

தெய்வச்செயல்.

கனத்தபுகழ் படைத்தபெருங் காவலன்றன் மகடனது கணவனோடே, சினத்ததிக வெறுப்பாகிச் சிவனைப்போக்கிட வுன்னிச் சென்றுகானில், இனத்தடியா லடியிருக்க மத்தளவே ழும்பணிவ ளினிமை கேட்டே, கனத்தகிளை தனிற் கபிற்றை மாட்டியவ னுயிர்விடுத்த கதை கேளீரோ. ௪௪௯

சமர்த்தனெனப் பெயர்படைத்து மலையிலிருந் தெழுகடலைத் தாண்டினாலும், இமைக்குமுன்னே பூலோகச் சக்ரவர்த்தி யிவனெனப்பே ரெடுத்திட்டாலுஞ், சுமக்குமுன்னே யன்னையுட கருக்குழியி லின்னதெனச் சூட்டுமீசன், அமைத்தபடி யல்லாது நினைத்தபடி முடியாதென் றறையலாமே.

மானென்று வடிவெடுத்து மாரீசன் போய்மடிந்தான் மானே யென்று, தேனென்று மொழிபேசிச் சீதைதனைச் சிறையிருக்கத் திருடிச் சென்றோன், வானென்று மரசிழந்தான் தண்டலையார் திருவுளத்தின் மகிமைகாணீர், தானென்று நினைக்கையிலே தெய்வமொன்று நினைப்பதுவுஞ் சகசந்தானே. ௪௫௧

ஆதியா மிருவர் நட்புக் கவமதிப் புற்ற வர்க்குச்
சூதினாற் கபடஞ் செய்து துணைபிரிந் திடுவ ரென்றோர்
வேதியன் பவன வாயில் வேசைதாய் பச்சைநாவி
யூதிய கதைபோ லாகி யுறுநர கெய்துவாரே. ௪௫௨

மதியிலா மறையோன் மன்னன் மடந்தையை வேட்கையாலே, ருதுவது காலந்தன்னிற் றோஷமென் றுரைத்தே யாற்றிற், புதுமையா யெடுத்தபோது பெட்டியிற் புலி

வாயாலே, யதிருடன் கடியுண் டன்றே வாருயிர் துறந்தான் மாதோ. சருரு

கரந்தொருவன் கணைதொடுக்க மேற்பறக்கும் ராசாளி கருத்துங் கண்டே, யுரந்துசிறு கானகத்தி லுயிர்ப்புறுப் பேடு தனக் குரைக்குங் காலே, விரைந்துவிடந் தீண்டவுயிர் விடும் வேடன் கணையால்வல் லூறும் வீழ்ந்த, தரன்செயலே யாவதல்லாற் றன்செயலா லாவதுண்டோ வறிவுள்ளோரே. ()

ஒன்றை நினைக்கி னதுவொழிந்திட் டொன்றாகு
மன்றி யதுவரினும் வந்தெய்து - மொன்றை
நினையாத முன்வந்து நிற்பினு நிற்கும்
எனையாளு மீசன் செயல். சருரு

கயவர் களிப்பு.

உண்ணுவிருந்து முதவிகொள்ளாத வுறவும் பொன்னை
யெண்ணுக்கணிகையு மின்புலவோருநல் லேவலருந்
தண்ணாரம்புல்லருந் தாமாவுங் காலுண்ணுஞ் சற்குருவுங்
கண்ணாரக்காணின் மகிழ்வார்கள் செல்வக் கயவர்களே.

அறிவின்விசேடம்.

புத்திமான் பலவா னாவான் பலமுளான் புத்தி யற்றால்
எத்தனை விதத்தி னாலு மிடரது வந்தே தீரும்
மற்றொரு சிங்கந் தன்னை வருமுயல் கூட்டிச் சென்றே
உற்றதோர் கிணற்றிற் சாயல் காட்டிய வுவமையே போல்.()

பொருள்களின் சிறப்புப் புல்லியரறியார் எனல்.

நான மென்பது மணங்கமழ் பொருளது நாவிலுண் பதுவோ சொல், ஊனு ணங்குவேன் மடந்தைய ரணிவது வு

யர்மூலைத் தடங்கோட்டில், ஆனதங்கது பூசினால் விங்குவ தமையுமோ வெனக்கேட்பக், கானவேட்டுவச் சேரிவிட் டகன்றனர் கடிகமழ் விலைவாணர். சருஅ

செல்வச்சிறப்பு.

செல்வத்தைப் பெற்றார் சினங்கடிந்து செவ்வியராய்ப்
பல்கிளையும் வாடாமற் பாத்துண்டு-நல்லன
தான மறவாத தன்மையரே லக்ஷ்மிதென்பர்
வானகத்து வைப்பதோர் வைப்பு. சருகூ

உயிருள்ளவரைக்குங் கொடாதோர்.

கற்புடை மாதர் கொங்கை கவரிமான் மயிரின்கற்றை
வெற்புறு வேங்கை யின்றோல் வீரன்கை வெய்ய கூர்வேல்
அற்பர்தம் பொருள்க டாமு மவரவ ரிறந்தபின்னே
பற்பலர் கொள்வா ரிந்தப் பாரினி லுண்மை தானே. சகூய

இல்லறதரும மறியாப் பெண்டீர்.

உற்றவரா யிருந்தாலும் விருந்தா வந்தால்
ஒருவேளை யிராதி ரண்டு வேளை
மற்றதற்கு மேலிருந்தான் முனக்கங் காணும்
மண்ணில்விரற் கடைபதியும் வீடு வாசல்
பெற்றதொரு சிறுவருக்கு மடி தப்பாது
பெட்டியுஞ் சட்டியுமிரண்டுமோதிக்கொள்ளும்
சற்றிதுகண் டறிந்தங்கே விலகா ராகிற்
சட்டிமுட்டி பானையெல்லாந் தகர்ந்துபோமே. சகூக

பேதமிலாரிவரெனல்.

கற்றவர்க்கும் நலனிறைந்த கன்னியர்க்கும் வண்மைகை
உற்றவர்க்கும் வீரரென் றுயர்ந்தவர்க்கு முலைகையாள்
கொற்றவர்க்கு முண்மையான கோதில்ஞான சரிதராம்
நற்றவர்க்கு மொன்றுசாதி நன்மை தீமையில்லையே. ௪௯௨

அற்பரிடத்திற் சேர்ந்தபொருள் பெருமையடையாது.

வீணர்பூண் டாலுந் தங்கம் வெறும்பொய்யா மேற்பூச் சென்பார், பூணுவார் தராப்பூண் டாலும் பொருந்திய தங்க மென்பார், காணவே பனைக்கீ ழான்பாற் குடிக்கினுங் கள்ளே யென்பார், மாணுல கத்தோர் புல்லர் வழங்குரை மெய்யென் பாரே. ௪௯௩

இன்னதுசெய்தால் இன்னதுவிளையுமெனல்.

ஆசாரஞ் செய்வா ராகி லறிவொடு புகழு முண்டாம்
ஆசார நன்மை யாலு லவனியிற் றேவ ராவர்
ஆசாரஞ் செய்யா ராகி லறிவொடு புகழுமற்றுப்
பேசார்போற் பேச்சு மாகப் பிணியொடு நரகில் வீழ்வார். ( )

வண்ணானைப் புகழ்தல்.

சிரம்பார்த்தா னீசனயன் றேவிதனைப் பார்த்தான்
கரம்பார்த்தான் செங்கமலக் கண்ணன் - உரஞ்சேர்
மலைவெளுத்த திண்புயத்து வண்ணான்சீ ராமன்
கலைவெளுத்த நேர்த்திதனைக் கண்டு. ௪௯௫

புருடராவார் செய்யத்தக்கவை.

பண்புளருக் கோர்பறவை பாவத்திற் கோரிலக்கம்
அன்பிலரைக் கண்டக்கா ணாற்காலி திண்புவியை

ஆள்வார் மதுரை யழகியசொக் கர்க்கரவம்
நீள்வா கனநன் னிலம். ச௬௬

முத்தேவர் உணவுமுதலியன.

சிறுவ னுளைபயறு செந்நெற் கடுகு
மறிதிகிரி தண்டு மணிநூற் - பொறியரவம்
வெற்றேறு புள்ளன்னம் வேதனரன் மாலுக்குக்
கற்றூழம் பூவே கறி. ச௬௭

குணாகுணம்.

நிலமதிற் குணவான் றோன்றி னீள்குடித் தனரும் வாழ்வார்
தலமெலாம் வாசந் தோன்றுஞ் சந்தன மரத்திற் கொப்பாம்
நலமிலாக் கயவன் றோன்றி னற்குடித் தேசம் பாழாம்
குலமெலாம் பழுது செய்யுங் கோடாரிக் காம்பு நேராம். ()

முற்பிறப்புகளின் வினைத்திறமுணர்தல்.

இறந்த பிறப்பிற்றுஞ் செய்த வினையைப்
பிறந்த பிறப்பா லறிக - பிறந்திருந்து
செய்யும் வினையா லறிக வினிப்பிறந்
தெய்தும் வினையின் பயன். ச௬௯

ஊனுடம்பு புகழுடம்புகளின் விசேடம்.

ஒருவனே யிரண்டு யாக்கை யுறுகுவ னவையா வென்னில்
உருவமும் புகழு மாகு மகற்குணீ யின்பமுற்று
மருவிய யாக்கை யிங்கே மாய்ந்திடு மற்றை யாக்கை
திறமதா யுலக மேறிச் சிறந்துபின் னிற்கு மன்றே. ச௭௰

கோயில் வலம்வரும் விதி.

கையசை யாதே முத்தோ ரைந்தன்றிக் கருதிடாது
பையவீ ரடிக்கு நாப்ப ணோரடிப் பரப்பே றாது
செய்யசூ லகட்டின் முற்றிச் செல்கின்ற செல்வ மாதர்
தொய்யடி நடையிற் சூழும் வலத்தினார் முத்தி சேர்வார்.

கடவுளை வணங்காத்தலை.

வீட்டுத் தலைவநின் றாள்வணங் கார்தம் விரிதலைசும்
மாட்டுத் தலைபட்டி மாட்டுத்தலைபுன் வராகத்தலை
யாட்டுத் தலைவெறி நாய்த்தலை பாம்பி னடுத்தலைகற்
பூட்டுத் தலைவெம் புலைத்தலை நாற்றப் புழுத்தலையே. ௭௨

கண்.

தெண்ணீர் முடியனைக் காணார்தங் கண்ணிருள் சேர் குருட்டுக், கண்ணீர் சொரிந்தகண் காசக்கண் புன்முலைக் கண்ணாகக்கண், புண்ணீரொழுகுங் கொடுங்கண் பொருமைக்கண் புன்கண் வன்கண், மண்ணீர் மையுற்ற கண் மாமணிநீத்தகண் மாலைக்கண்ணே. ௭௩

செவி.

கண்ணுத லான்புகழ் கேளார் செவிபொய்க் கதையொலியும்
மண்ணுற மாதரு மைந்தருங் கூடி யழுமொலியுங் [மொத்
துண்ணெனுந் தீச்சொல் லொலியுமவ் வந்தகன் றூதர்கண்
துண்ணுற வாவென் றுரப்பொலி யும்புகு மூன் செவியே.

வாய்.

மணிகொண்ட கண்டனை வாழ்த்தார்தம் வாய்த் தெரு மண்ணுண்ட வாய், பிணிகொண்டவாய் சிடப் பிச்சுண்ட வாய்

வரும்பேரற்றவாய், துணிகொண்ட வாயனற் குடிண்டவாய் மலைஞ் சோர்ந்திழிவாய், குணிகொண்ட வுப்பிலிக் கூழுண்ட வாயெனக் கூறுபவே. ௪௭௫

பத்தியிலை யெனின்முத்தியிலை யென்பது.

சாத்திர முணர்ந்தானே னுஞ் சதுர்மறை யோர்ந்தானே னுங்
கோத்திரமுயர்ந்தானே னுங் குலமதிற் சிறந்தானே னும்
நேத்திரமூன்று கொண்டநிருமலன் கருணைக்கேசற்
பாத்திர னில்லானாகிற் பரன்பதமடையா னன்றே. ௪௭௬

இவர்களோடிவையழியு மெனல்.

தாயோ டறுசுவைபோந் தந்தையொடு கல்விபோஞ்
சேயோடு தான்பெற்ற செல்வம்போந் - தாயவுடல்
வந்தோன் மரிக்கில் வலிபோ மனையெனிலோ
அந்தோ விவையெல்லாம் போம். ௪௭௭

பசியின்கொடுமை.

மானங் குலங்கல்வி வண்மை யறிவுடைமை
தானந் தவமுயற்சி தாளாண்மை - தேனின்
கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும்
பசிவந் திடப்பறந்து போம். ௪௭௮

பழக்கம்.

சித்திரமுங் கைப்பழக்கஞ் செந்தமிழு நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம் - நித்தம்
நடையும் நடைப்பழக்க நட்புந் தயையுங்
கொடையும் பிறவிக் குணம். ௪௭௯

நன்றி மறவாமை.

சிதைவகல் காதற் ருயைத் தந்தையைக் குருவைத் தெய்வ
பதவியந் தணரை யாவைப் பாலரைப் பாவை மாரை
வதைபுரி குநர்க்கு முண்டா மாற்றலா மாற்றன் மாயா[டோ.
உதவிகொன் ருர்க்கென் றேனு மொழிக்கலா முபாய முண்

செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது. சஅக

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று. சஅஉ

எந்நன்றி கொன்ருர்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு. சஅங

உன்னுட்டா ரெல்லா முயிர்காத்துக் கோத்திரத்தில்
எந்நாளும் வாழ்ந்தே யிருப்பதினல் - பன்னும்
பூதலத்தின் மேன்மைபெறு புன்னைவன நாதனே
வதிகழ்ந்து நன்றிமற வேல். சஅச

தமிழ்மேற்சலித்துக்கூறியது.

அடகெடுவாய் பலதொழிலு மிருக்கக்கல்வி
யதிகமென்றே கற்றுவிட்டோ மறிவில்லாமல்
திடமுளமோ கனமாடக் கழைக்கூத்தாடச்
செப்பிடுவித் தைகளாடத் தெரிந்தோமில்லைத்
கடமுலைவே சையராகப் பிறந்தோமில்லைச்
சனியான தமிழைவிட்டுத் தையலார்தம்
இடமிருந்து தூதுசென்று பிழைத்தோமில்லை
என்னசென்ம மெடுத்துலகி லிரக்கின்றோமே. சஅரு

தமிழைநன்குணரா புலவரையும்பூமானையும்
இழிவாய்க்கூறியது.

குட்டுதற்கோ பிள்ளைப்பாண் டியனிங்கில்லைக்
குறும்பியள வாக்காதைக் குடைந்துதோண்டி
எட்டினமட் டறுப்பதற்கோ வில்லிபில்லை
யிரண்டொன்றாய் முடிந்துதலை யிறங்கப்போட்டு
வெட்டுதற்கோ கவியொட்டக் கூத்தனில்லை
விளையாட்டாக் கவிதைதனை விரைந்துபாடித்
தெட்டுதற்கோ வறிவில்லாத் துரைகளுண்டு
தேசமெங்கும்புலவரெனத்திரியலாமே. ௪௮௬

முனிவரொப்பவர்புலவர்.

போற்றினும் போற்றுவர் பொருள்கொடாவிடில்
தூற்றினுந் தூற்றுவர் சொன்ன சொற்களை
மாற்றினு மாற்றுவர் வன்கணாளரிற்
கூற்றினும் பாவலர் கொடியராவரே. ௪௮௭

இன்னதற்கின்னதழகெனல்.

ஊசிக்கழகு முனைமழுங்காமை யுயர்ந்தபர
தேசிக்கழகிந் திரியமடக்கற் றிரண்முலைசேர்
வேசிக்கழகின் னிசைபலநூல்கற்ற வித்வசனர்
நாசிக்கழகு பொடியெனச் சொல்லுவர் நாவலரே. ௪௮௮

யாவர்க்குமிதுபொதுவெனல்.

ஆறுகுளந் தோப்பு மணிநியமஞ் சத்திரமுங்
கூறுவழித் தாறுநிழல் கோட்டமுடன்-மாறுமன

வேசிசபை நீர்ப்பந்தல் வேந்தன் மடமயிலே
காசினிக்குள் ளேபொதுவாங் காண். ௪அ௯

பெண்ணாசை.

மங்கையர்கள் யோனிமிசை வைத்திருக்கு மாசையினைப்
பங்குசெய்து நூற்றிலொரு பங்கெடுத்துக்-கங்கைமதி
வேணியரன் பாதார விந்தத்தில் வைத்தக்கால்
காணலாங் காணுக் கதி. ௪௯0

உந்தியின் சுழியின் கீழ்ச்சே ருரோமமாங் கரிய நாகம்
சந்திர னெனவே யெண்ணித் தையலாள் முகத்தை நோக்க
மந்திர கிரிகள் விம்மி வழிமறித் திடுதல் கண்டு
சிந்துரக் கயற்க ணோடிச் செவிதனக் குரைத்த தம்மா. ௪௯௧

மாகமா மேடை மீதில் மங்கைநின் றுலாவக் கண்டு
ஏகமா மதியென் றெண்ணி யிராகுவந் துற்ற போது
பாகுசேர் மொழியி னாளும் பதறியே பாதம் வாங்கத் [றே.
தோகைமா மயிலென் றெண்ணித் தொடர்ந்தரா மீண்ட தன்

அருகிலிவ ளருகிலிவ ளருகில்வர வுருகும்
கரியகுழன் மேனியிவள் கானமயில் சாயல்
பெரியதன மிடைசிறிது பேதையிவ ளோயோ
தெருவிலிவ ணின்றநிலை தெய்வமென லாமே. ௪௯௨

பாலனைப்பழித்தல்.

அரும்பால காமுனம் பூமணஞ் சொற்பொரு ளாகமுயிர்[ரைப்
கரும்பாஞ் சுவையெள்ளு மெண்ணெயும் போலொத்த காதல

பெரும்பாவி னல்லன்னங் கங்கா சலத்தைப் பிரிப்பதுபோல்
சுரும்பாம் புலவர் யமனாலே செக்கெனத் தோன்றினையே. ()

பாண்டியன் றாரானேன் பசலைமுலைப் பாலானேன்
ஆண்டிகையி லேந்தியதொன் றானேனே-வேண்டியபோ
றுள்ளங்கைத் தேனானே னோர்மதலை பூத்தபின்பு
உள்ளங்கைத் தேனா னுனக்கு. ௪௯௫

பாண்டியன் மாலைகண் டாய்மக ளேநினைப் பார்த்தவர்க்கு
வேண்டிய வின்ப மிகவரு மேவெண்ணெ யேதிருடித்
தாண்டிக் குதித்தநற் கோதண்ட ராமன்றடவரைமேல்
ஆண்டி யிருப்பிடந் தாத னிருப்பிட மானபின்னே. ௪௯௬

அரும்பாக்கிய கொங்கை பாலாக்கிமுங்க ளப்பனெஞ்சை, இரும்பாக்கி யென்னெஞ்சைப் பித்தளையாக்கியவ் வேந்திழையைக், கரும்பாக்கியென்னையும் வேம்பாக்கியிவ்வண்ணங் கண்டனையே, பெரும்பாக்கிய மல்லவோமகனேயுனைப் பெற்றதுவே. ௪௯௭

கேளந்தநாளையின் மைந்தாநின்னையனாக் கிட்டிமத
வேள்வந்துபூச லிடமதிகாய வெருண்டெனது [ன்ன
தாள்வந்துபற்றிமுன் வாய்புதைத்தேநின்று தாழ்மைசொ
நாளந்தநாளல்லவே யிந்தநாளந்த நாயகர்க்கே. ௪௯௮

மாலாக்கியென்னைப் பெருவயதாக்கியென் மார்பின்முலை
பாலாக்கியங்கம் பசுநரம்பாக்கியப் பாவையரை
மேலாக்கிச்சிக்கு விளக்கெண்ணெயாக்கி யென்மேனியெங்குந்
தோலாக்கவோமகனே பிள்ளையாய்வந்து தோன்றினையே. ()

வெறி விலக்கல்.

வண்டுறை சோலைத் தணிகை மருத்துவன் வந்திடலிங்
கண்டு படாதவிக் காமச் சுரம்விடு மாயிழைக்குப்
பண்டு பழகினர் போலிந்த வேளையிற் பாயசத்தைக்
கொண்டுவந் தீரிதிற் றேடம் பிறந்திடுங் கோதையரே. ௫௦

கொம்மை முலைமின்னாள் கொடுந்துயர்கொண் டாலதற்குச்
செம்மை கெட நீநினைத்தாற் றீருமோ-தம்மை
அடுத்தவரைக் காத்தருளு மம்பலவா முத்தி
கொடுத்தருளத் தீருங் குணம். ௫௧

பொன்பிதிரு மெண்சுணங்கு பூத்திலகு கும்பமுலை
மின்பொருவு நூன்மருங்குன் மெல்லியற்குத்-தென்புலியூர்
அல்லமையுங் கண்டர்செய லன்றி யொருவருடை
வல்லமையிற் றீராது மால். ௫௨

வண்டாங்கிசைபயின் மாலையன்வேலப்பன் மைந்தனிதி [னே
கொண்டான்கிளையை வளர்த்தான்குழந்தைக் குவட்டின்மின்
பண்டாங்கிசையினண் மால்கொண்டுபாம்பன் குளத்தினடுக்
கண்டாங் கிளைக்கிழித் தாலென்னபாவங் கருதுவதே. ௫௩

அணியார் கடுக்கை நறுந்தும்பைகங்கை யறுகுடனே
பணியார்சடாடவிக் கச்சாலைநாதர் பணிவணாயில்
தணியாதமாமதப் பேய்பிடித்தாடுமித் தையலுக்கு
மணியாட்டினால்விடுமோ சொல்லுவீரிந்த மாநிலத்தே. ௫௪

சுரம்போக்கு.

பூச்சிலைக்கன்னற்கைச் சேஷாசலேந்த்ரன் பொருப்பிடத்தே
காச்சியபாலைக் குடிபோவென்றேனந்தக் காரிகையும் [தாய்
பேச்சிலெத்துக்கள்ளி பின்கைகைராமற்கு முன்சொன்ன
வாய்ச்சுதென்றேநடந் தாள்பாலையான வனந்தனிலே. ௫௱௫

எறிக்குமதிச்சடை யண்ணுமலைய மொழிற்கிரியில்
பறிக்கின்றபூவை மிதிக்கப்பொருளந்தப் பாதத்தினால்
பொறிக்கண்பிசாசுக ணெற்களைத்தூவிப் பொரிபொரித்துக்
கொறிக்கின்றபாலையி லெப்படிப்போயினள் கோமளமே.

நாணிக்கண்புதைத்தல்.

தேனேர் தமிழ்வெங்கடேசுரட் டேந்திர தீரன்வரை
மானேயரிய புதுக் கோட்டையுற்றிடு மாறுதவி
தானேபுரிந்தனை யங்கேந்தலையுந் தரிசிக்கச்செய்
நானேசமான விதம்பெறுவேன்கவி நாப்புகழ்ந்தே. ௫௱௭

மாகம்பனன்ன தமிழாகரனுயர் வர்த்தகசை
யோகம்பயிலு மிலாபனப்பாஜி யொருவரைமேல்
வாகம்பங் கைவிடிற் கூடலூரோடு மலையாளமுந்
தாகம்புரிந்தர சாட்சிசெய் வேனடி தாழ்குழலே. ௫௱௮

காமவருத்தம்.

சங்கமுழங்குந் தமிழ்நாடன் றன்னை நினைந்த போதெல்லாம்
பொங்குங் கடலு முறங்காது பொழுதோர் நாளும் விடியாது
திங்களுறங்கும் புள்ளுறங்குந் தென்ற லுறங்குஞ் சிலகாலம்
எங்கு முறங்கு மிராக்கால மென்க ணிரண்டு முறங்காதே. ()

காமத்தால் வருங்கெடுதி.

காமமே குலத்தினையு நலத்தினையுங் கெடுக்கவந்த களங்கமாகும், காமமே தரித்திரங்க ளனைத்தினையும் புகட்டிவைக்குங் கடாரமாகும், காமமே பரகதிக்குச் செல்லாமல் வழியடைக்குங் கபாட மாகும், காமமே யனைவரையும் பகையாக்கிக் கழுத்தரியுங் கத்தி தானே. ௱௯

பகையுறவுகள் தன்னையன்றி வேறிலையெனல்.

தானே தனக்குப் பகைவனு நட்டானுந்
தானே தனக்கு மறுமையு மிம்மையுந்
தானேதான் செய்த வினைப்பயன் றுய்த்தலாற்
றானே தனக்குக் கரி. ௱௧௧

புலவருக்குவேண்டுவன.

தேயாத செருப்புமொரு பயலும் வேண்டுஞ்
  சென்றிருக்க யிடம்வேண்டுந் திரியவென்றால்
ஓயாத கால்வேண்டு முண்ணுஞ் சோற்றி
  லுருசி கெட்ட நாவேண்டு முலுத்தர்தம்மைக்
காயாத மனம்வேண்டும் பொறுமை வேண்டுங்
  கசடருக்கு வசையுரைத்துக் காட்டல் வேண்டுந்
தாயாக புலவருக்கித் தனையுண்டானாற்
  றரணி யெங்குஞ் சஞ்சரிக்கத் தரங்கண்டாயே. ()

மாதர் கொடுமை.

மனைவியின்பாற் பட்ட சலத்தாலே வந்த
  வருத்தமதைச் சிவனிடம்போ யுரைத்தே னப்போ

தெனையவரு மருகிருத்தி யப்பா வென்ற
னியன்மனையா ளாருக்கு மடங்கா நீலி
அனைவர்களுஞ் சிரிக்கவென்னைச் சபையிலேற்றி
யலக்கழித்தா ளுரையுடம்பாய் மெலிந்தேன் பின்னும்
வினைவிதியா னடுக்கமுங்கொண் டிருக்கின்றேனென்
மெலிவையுரன் மத்தளப்பால் விளம்புமாறே. ௫௧௩

ஆகிலுநீ நமைவேண்டி வந்தா யிந்த
வகக்கலியோ பெண்டுகண்மூப் பானகாலம்
வேகமுடன் சட்டிவரு வதற்குமுந்தி
மேவுதலை சாய்த்துவிட வேண்டுந் தம்பி
பாகமுடன் சண்டிகைக்குக் கணவன்சொன்ன
பக்குவம்போ லுன்மனைவிக் கிதங்கள்பேசி
தாகமுடன் சாடைகண்டு நோக்கம் பார்த்துத்
தந்திரமாயுன் காலந் தள்ளுவாயே. ௫௧௪

மூடர்பால் கவிசொல்லாமை.

கல்லாத மூடர்கள்பாற் கவியுரைக்கிற் கற்பனைசொற் கனிவின் சாரம், எல்லாநன் கறிவரா வறியாதார்க் குரைத்த ல்கம ரினிலே பாலை, இல்லாமற் கவிழ்த்தமெொக்கு மென்பது நீ யறியாயா வின்பாச் சொல்ல, வல்லார்நின் பாலன்றி யெவர்க் குரைப்பார் பழனிக்கு மாரவேளே. ௫௧௫

பத்தூ ஊர் பெயர்கள் வந்தன காண்க.

குலநலங்கற் பினிற்குன்றுக் குடிபிறந்தாள் காரைக்
குடிவைத்த குழற்றேவி கோட்டையன முலையாள்

நலமிலகுங் கோவிலூ ரம்பனையா ணன்கா
நாடுகாத் தான்றேவி நான்கண்ட தேவி
இலகுமம ராவதியி லிருந்தமினு ரெவரு
மிச்சிக்கும் பேரழகா புரிகருணை யிவள்பால்
உலகுபுகழ் முறைசைநக ருளதரும துரையே
ஓங்குபுயச் சண்முகநல் லுதாரகுண மாலே. ௫௧௬

ஆறுநகர் பெயர்கள் வந்தனகாண்க.

இராமேசுரஞ்சென்ற தின்னமுநற்பல னெய்த வந்தும்
வராமே திருக்கஞ்சி வாய்புகக்கொண்டு மதுரையினே
சாரமேவு பித்தர் மையிலையென் றேசொலத் தக்கதின்றி
விராவப் பொருந்தில்லை மேவிநின் றேன்செந்தில் வேலரசே.

பதினைந்து பலகாரப்பெயர்கள் வந்தன காண்க.

தேங்குழலப் பந்தோசை யித்தியமா வுடலிற்
றிகழ்வடையப் பழம்பணியா ரங்களெலா நீத்தே
ஓங்கியமு தலட்டுபல காரமுள வனைமார்க்
கொடுங்கிப்பா யசமனைய வுற்றூர்க்கு மஞ்சி
வீங்கிபக்கோ டாமுலையிற் பூந்திளவு கொண்டுன்
விரகத்தி லதிரசமுற் றன்பிட்டு வந்தாள்
தாங்குதனின் கடன்செந்தில் வேலரசே யவணின்
றன்பாற்சே ருதல்சீரைத் தருமுருக்குத் தானே.

இங்கிதம்.

கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ்செப் பாது கண்டது மொழிமோ

பயிலியது கேழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவு முளவோ நீயறியும் பூவே. ருகஅ

சங்கரன் றேவி தமயன் மனைவி தனக்கு முன்னும்
மங்கைய ளேறிய வாகனங் காணுமற் றங்கவளோ
கொங்கைக ளீரைந் துடையவ ளாயிக் குவலயத்தில்
எங்குந் திரிகின்ற வைரவ ரூர்தியென் றேநினையே. ருஉ0

அரவிந்த நண்பன் சுதன்றம்பி மைத்துன னண்ணன்கையில்
வரமுந்தி யாயுதம் பூண்டவன் காணுமற் றங்கவனே
பரமன் றிகிரியை யேந்தினன் மைந்தன் பகைவன் வெற்பை
உரமென்றெடுத்தவன்மாற்றான்றன்சேவக னொண்டொடியே

கொல்லுலை வேற்க யற்கண் கொவ்வையங் கனிவாய் மாதே
நல்லணி மெய்யிற் பூண்டு நாசிகாபரண மீதில்
சொல்லரிற் குன்றி தேடிச் சூடிய தென்னே வென்றான்
மெல்லியகண்ணும் வாயும்புதைத்தனள்வெண்முத்தென்றாள்

அண்டரண்ட மிரண்டுமுண்ட வரங்கனேயவ னுதலால்,
அந்தலங்கையு மரக்கர்சேனையு மவன் வயிற்றினி லில்லையோ
தெண்டிரைக்கடல் சிகரமேருவுந் திருவயிற்றினி லில்லையோ,
சீதையைச்சிறை வைத்ததாமென முனிவனெப்படி செப்பி
னான், குன்றுகுன்றென நின்றமந்தியுங் குரங்குந் தன்னுடை
சேனையுங், கூடியேபடை யேகினாரென வவனுமெப்படி கூறி
னான், கண்டதுண்டம தாக்குவேன்கவி சொன்னவன்றனைக்
காணிலேன், கம்பனேமிகு வம்பனேவவன் காளை சூளைசுத
னல்லவோ. ருஉ௩

தையலில்லம் புகும்போதென் சுதன்குரலைக் கேட்டோ துங்கித் தாழ்வாரத்தில், பையவொன்றிச் செவிகொடுத்தேன் பாலனைப்பார்த் தக்கோதை பணமீயென்றாள், ஐயனிறந் திடிலெல்லா முனதென்றா னவன்றாங்கு மமயம் பார்த்தோர் சையமெடுத் தவன்றலைமேற் போடுவாய் போடுமுன்னுன் றழுவே னென்றாள். ௫உச

மும்மதக் கரியி ராறு மூரிவல் லியமூ வேழு
செம்மையிற் றின்றேன்சிங்க மொன்றினைத் தின்னவேண்டி
நம்மனத் திச்சை கொண்டோ நண்ணினை வாவென்றாடு
விம்மலுற் றெழலுஞ்சிங்கம் வெருண்டுசே ணோடிற்றன்றே.

உரமுடன் மொழிவார் வார்த்தை யுறுதியு மில்லை கண்டாய்
மரமதின் கீழே யாடும் வானவா னரத்தை மானும்
புரமதி னுமலி காலிற் பூட்டிய மணிபோ லாடும்
தரமிலான் மொழியும் வார்த்தை தங்கத்தின் கட்டிபோலாம்

நம்பு நீர்த்துறை நல்லவர்க் கல்லவென்
றென்பு தூக்கி யிழுக்குவைத் தார்கள்போல்
பம்பு மேகலைப் பாவையர்க் கல்லவென்
றென்பு போல்வெளுத் தேகிய குஞ்சியே. ௫உஎ

நூதன கல்வி தன்னி னூலிடை யில்லா ளாகும்
மாதுசெய் மதன லீலை வகையைப்பார்த் தைய மாகக்
காதலன் றெளியத் தானக் களிற்றினைப் பிறக்கும் போதே
கோதறு சிங்கக் குட்டிக் கொன்றிடக் காட்டினாளே. ௫உஅ

கொண்டநற் கலைக ளோடுங் குணமிலாக் கோதை மாரைக்
கண்டுகண் டிருப்ப தல்லாற் கனவிலும் புல்ல வொண்ணு
துண்டன மதுவை யுண்ண வோவியப் பூவில் வீழ்ந்த
வண்டினம் பட்ட பாடு மனிதரும் படுவர் தாமே. ௫௨௯

ஆட்டு வாணிப னுலிங்க னத்திலும்
கூட்டு வாணிபன் கைக்குட்டு நன்றதா
மோட்டு மாதர் முயக்கிற்ச ரசமே
காட்டு மாதரைக் காணலு நல்லதே. ௫௩௰

காரெனுங் குழல்க டப்பிக் கடுஞ்சிலை வாளி தப்பி
மேரென வளர்ந்து நின்ற வேழத்தின் கோடு தப்பி
தாருறு கரியரோமச் சங்கிலி வழியே சென்று
சீரிய னென வளர்ந்த செல்வனல் குலிற்கை வைத்தான். ()

வில்லது வளைந்த தென்றும் வேழம துறங்கிற் றென்றும், வல்லியம் பதுங்கிற் றென்றும் வளர்கடா பிந்திற் றென்றும், புல்லர்தஞ் சொல்லுக் கஞ்சிப் பொறுத்தனர் பெரியோ ரென்றும், நல்லதென் றிருக்க வேண்டா நஞ்செனக் கருதலாமே. ௫௩௨

அருமையும் பெருமை தானு மறிந்துடன் படுவர் தம்மால்
இருமையு மொருமை யாகு மின்புறற் கேதுவுண்டாம்
பரிவிலாச் சகுனி போலப் பண்புகெட் டவர்க டம்பால்
ஒருமையி னிரய மெய்து மேதுவே யுயரு மன்னே. ௫௩௩

விஞ்சைய ரருமை தன்னை விஞ்சைய ரறிய வேண்டும்
புன்செய லறிவி லினர் புகழ்ந்ததை யறியா ரென்போல்

விஞ்சிய மகப்பெ றுளவ் வேதனை மலடி தானும்
கிஞ்சிற்று மறிந்தி டாள்போ லிருந்திடுங் கேள்வி தானே. ()

சலந்தனிற் கிடக்கு மாமை சலத்தைவிட் டகன்றபோது
கொலைபுரி வேடன் கண்டு கூரையிற் கொண்டு செல்ல
வலுவினு லவனை வெல்ல வகையொன்று மில்லை யென்றே
கலையெலி காகஞ் செய்த கதையென விளம்புவோமே. ()

கரியொரு திங்க ளாறு கானவன் மூன்று நாளும்
இருதலைப் புற்றி னுக மின்றுணு மிரையீ தென்று
விரிதலை வேடன் கையில் விற்குதை நரம்பைக்கவ்வி
நரியனுர் பட்ட பாடு நாளைநாம் படவே போவோம். ௫௬௪

மலையென்னும் வினைதீர மறுவற்ற புனல்மூழ்கி
அலைகின்ற முழுமூட ரறிவென்ன வறிவென்ன
புலையன்றன் மலமுண்ணு மெனையுண்ணும் புலையருக்கும்
குலமென்ன நலமென்ன கூகூவென் றனகோழி. ௫௬௭

மயில்குயில் செங்கா லன்னம் வண்டுகண் ணுடிபன்றி
அயிலெயிற் றரவு திங்க ளாதவ னுழி கொக்கோ
டியரும்விண்கமலம்பன்மூன் றுறுகுண முடையோர் தம்மை
இயலுறு புவியோர் போற்று மீசனென்றெண்ணலாமே. ()

நிலத்தினிற் சுனையின் மூழ்கி நின்றவ டன்னைநேரே
குலத்தலை மஞ்ஞை கண்டு கூவெனக் காவி லேக
மூலைத்தலை யதனைக் கண்டு மும்மதக் கரிவந் துற்ற
தலைத்தலை சிங்க மென்றக் களிறுகண் டேகிற் றம்மா. ௫௬௯

கம்பமதக் கடகளிற்ருன் றிலலை வாழுங்
கணபதியின் பெருவயிற்றைக் கண்டு வாடி
உம்பரெலாம் விழித்திருந்தா ரயில்வேற் செங்கை
யுடையவறு முகவனுங்கண் ணீரா ருனுன்
பம்புசுடர்க் கண்ணனுமோ நஞ்சுண் டான்மால்
பயமடைந்தா னுமைமுடற் பாதி யானுள்
அம்புவியைப் படைத்திடுவ தவம தேயென்
றயனுமன்ன மிறங்காம லலைகின் ருனே. ருசய

தார்க்கொன்றைத் தாவென்றேன் ருவேழிலொன்றென்ருன்
ஊர்க்கஞ்சி நான்மூன்றி லொன்றென்றேன் - யார்க்கும்
பொதுவென்ருன் பூவென்றேன் போயினுன் ருேழி
இதுவோநம் மீச னியல்பு. ருசக

பகுதி தகுதி விகுதி யெனும் பாட்டில்
இகலி லிடையை யிரட்டித் - தகவின்
அருச்சித்தான் முன்னு மதுகடையாங் கண்டீர்
திருச்சிற் சபையானைத் தேர்ந்து. ருசஉ

நாரியின் முடிமேல் வையமும் வைய நடுவினிற்சிலையு மச்சிலையிற், பாரிய வுருளு முருளினிற் கணையும் பகழியிற் பாகனும்பாகன், சீரியமுகத்திற் றுரங்கமும் துரங்கச்சிகையி னிற் றலைவனு மாக, போரியலவுணர் புரஞ்செறு மாற்றல் புகலூறிற் புன்சிரிப்பாமால். ருசங

பொன்னகர் விட்டே கங்கா நதியிடை போந்தோ ரோதிமம், புவியிற் புனலிடை வந்தது கண்டே புடைசூழ்ந் தேப